விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி
*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | பங்குனி 20 | திங்கட்கிழமை (03.04.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 105

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# ஜெனீவா செல்லும் புலிகளுக்கு கொழும்பில் பூரண பாதுகாப்பு

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

கட்டு நாயக்கா விமான நிலையத்தின் ஊடாக வெளிநாடு செல்லும் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களுக்கு முன்னர் எவ்வாறு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டதோ அதே அளவு பாதுகாப்புடன் - அதற்கு சற்றும்குறையாத பாதுகாப்புடன் ஜெனீவா செல்வதற்கு வன்னியில் இருந்து பூரண பாதுகாப்பு வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை அரசாங்கப் பேச்சுக்குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் இராணுவத்தினரால் நேற்று கைது

### பருத்தித்துறையில் சம்பவம்

(வடமராட்சி)

பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத்தெருவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் இராணுவத்தினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை அப்பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் இவ் ஐவரையும் கைதுசெய்ததாக தெரிவிக்கப்பட்டது.

சாரதியான செல்வராசா கிருஸ்னராஜா (வயது 44)அவரது மனைவி கிருஸ்னராசா கலாவதி (வயது 39) உயர் தொழிநுட்ப் நிறுவன மாணவி கி.ரஞ்சினி (வயது 21)ஹாட்லிக் கல்லூரி மாணவர்களான கி.சுதாகர் (வயது 20) கி.திவாகர் (வயது 18) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

பொலிஸார் சகிதம் சென்ற இராணுவத்தினர் அவர்களை கைதுசெய்ததுடன் அங்கு நின்ற மோட்டார் சைக்கிளையும் எடுத்துச் சென்றுள்ளார்கள்.

இதேவேளை சில பொதிகளையும் அங்கிருந்து இராணுவத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை இராணுவத்தால் வெல்லமுடியாது!

## ஹொக்லண்டின் கருத்திற்கு தெற்கில் எதிர்ப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளை இராணுவத்தால் வெல்ல முடியாது என்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவின் முன்னாள் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் கூறியுள்ளதாக கொழும்பு ஆங்கில வார ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவிடம் ஒருவாரத்திற்கு முன்பாக விடுதலைப்புலிகளை இராணுவத்தால் வெல்ல முடியாது என்று ஹக்ரூப் ஹொக்லண்ட் கூறியுள்ளார். மேலும் விடுதலைப்புலிகள் இயக்கமானது அல்குவைடா போன்று பயங்கரவாத இயக்கம் அல்ல என்றும் அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்கள் என்றும் ஹக்ரூப் ஹொக்லண்ட் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு கடும் கோபத்துடன் பதிலளித்த கோட்டபாய ராஜபக்ஷ 'இங்கே நீங்கள் வேலை செய்யத்தான் வந்துள்ளீர்கள் அதை சரியாகச் செய்யுங்கள் பாரபட்சமாக நடக்காதீர்கள்' என்று கூறியுள்ளார்.

மேலும் ஹக்ரூப் ஹொக்லண்டுக்கும் புதிய கண்காணிப் புக்குழுத்தலைவர் உல்ப் ஹென்றிக்சனுக்கும் சில அறிவுரைகளை கோட்டபாய ராஜபக்ஷ அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. சிறிலங்காவின் கலாசாரத்தை வரலாற்றை முதலில் கற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை முன்னாள் கண்காணிப்புக்குழுவின் தலைவரின் பேச்சிற்கு கொழும்பு அரசியல் வட்டாரங்கள் இடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவருக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுக்க சில கட்சிகள் முடிபு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-4)

## ஐ.தே.க எம்.பி. மகிந்த விஜயசேகர அமைப்பாளர் பதிவியிலிருந்து நீக்கம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜயசேகர ஐக்கிய தேசியக்கட்சியில் மாத்தறை மாவட்ட அமைப்பாளர் பதவியில் இருந்தும் கட்சியின் நடவடிக்கை குழுவில் இருந்தும் விலக்கப்பட்டுள்ளார்.

கட்சித்தலைவர் என்ற வகையில் முழு மையான ஆதிகாரத்தையும் பயன்படுத்தி இவ் நடவடிக்கை எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் மேற்கொள்ளப்பட் டுள்ளது.

இது தொடர்பில் ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்றுக் காலை மகிந்த விஜயசேகரவிற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் காரணங்கள் எவையும் அக் கடிதத்தில் தெரிவிக்கப்படவில்லை. கட்சியின் ஒழுங்கு நடவடிக்கையின் அடிப்படையில் பலமாற்றங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கைதுசெய்யப்பட்ட மாணவர்களை உடன் விடுதலை செய்யவேண்டும்

### வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் மூன்று மாணவர்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் இராணுத்தினரால் கைது செய்யப்பட்ட சம்பவத்தை வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டித்துள்ளது. இந் நடவடிக்கையானது தமிழ் மாணவரை மீண்டும் மீண்டும் சீண்டிப்பார்க்கும் செயலாகவே நாம் கருதுகின்றோம். எதிர்வரும் மே மாதம் உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச் செயற்பாடு தமிழ் மாணவரின் கல்விச்செயற்பாடுகளை குழப்பும் செயலாகவே நாம் கருதுகிறோம் என மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட மாணவர்களை இராணுவம் உடன் விடுதலைசெய்யவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (கு)

## மனித முகத்துடன் பிறந்த அதிசய ஆட்டுக்குட்டி

(யாழ்ப்பாணம்)

குப்பிளானில் வெள்ளாடு ஒன்று மனித முகத்தை ஒத்த முக அமைப்புடன் குட்டி ஒன்றை ஈன்றுள்ளது.



நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இந்த மனித முக அமைப்பைக்கொண்ட அபூர்வ ஆட்டுக்குட்டி பிறந்தது. அபூர்வ முக அமைப்பு உடல மைப்பு டன் காணப்படும் இந்த ஆட்டுக் குட்டியை பெருந்தொகையான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். குப்பிளான் தெற்கு ஞானவைரவர் கோயிலுக்கு அருகில் உள்ள வீடொன்றில் வசித்துவரும் அரியமுத்து பாலச்சந்திரன் என்பவர் வளர்த்து வந்த வெள்ளாடு ஒன்றே இவ் அபூர்வ ஆட்டுக்குட்டியை (12 ஆம் பக்கம் பார்க்க)




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை தமிழ்ப் பேராசிரியருக்கு கனடாவில் அதியுயர் கௌரவ விருது

விவசாய விஞ்ஞானத் தொழில்நுட்பத்துறையில் புதிய ஒரு வியக்கத்தக்க கண்டுபிடிப்பிற்கு கனடா



அல்பேட்டா மாகாண விஞ்ஞானத் தொழிற்றுறைப் பிரிவு-எட்மண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த போராசிரியர்களான பேராசிரியர் Dr. தவா வசந்தன், பேராசிரியர் Dr. பெரால் ரிமெலி ஆகிய இருவருக்கும் 2005ஆம் ஆண்டிற்கான அதியுயர் கௌரவ விருதை வழங்கியுள்ளது. இந்த இருஆய்வாளர்களும் 'கொலஸ்ரோல்' என்னும் குருதியிலுள்ள கொழுப்புச் சத்தைக் குறைக்கவல்லஓர் 'நார்ப்பொருளை' 'ஓட்ஸ்' 'பார்லி' போன்ற தானியங்களிலிருந்து, மிகக் குறைந்த செலவில், செறிவான நிலையில், பிரித்தெடுக் கக்கூடிய, ஒரு புதிய வழிமுறையைக் கண்டுபிடித்துள்ளனர். இதனால் கனடா நாட்டின்.

1. உடல் நலப் பாதுகாப்புக்கான செலவுகளை கோடிக்கணக்கில் குறைத்துக்கொள்ளவும்

2. அல்பேட்டா மாகாண தானிய உற்பத்தியாளர்களுக்கு அதிக வருவாய் தரக்கூடிய புதிய சந்தைகளை உருவாக்கவும் வழி திறந்துள்ளது.

'Beta-Glucan என்பது இயற்கையாகத் தாவர கலச்சுவரில் காணப்படும், நீரில் கரையத் தக்க ஒரு நார்ப் பொருள். இது 'கொலஸ்ரோல்' என்னும் குருதியிலுள்ள கொழும்புச் சத்தைக் குறைக்க வல்லது. ஆனால் சிக்கனமாக இந்த நார்ப்பொருளை ஓட்ஸ், பார்லி முதலியவற்றிலிருந்து, அதன் உடல் நலம் பேணும் தன்மையை அழிக்காமல், பிரித்தெடுக்கும் முறையை இதுவரை காலமும் யாருமே கண்டு கொள்ள வில்லை.

'விவசாய, உணவு, சத் துணவு' - விஞ்ஞானத்துறையைச் சார்ந்த பேராசிரியர்கள் Dr. தவா வசந்தனும், Dr. பெரால் ரிமெலியும் மிக உயர்ந்த ரகமான 'Beta-Glucan' ஐ ஒரு 'பகுதிபடப் பிரிப்பு' முறையால், மிகச்சிக்கனமான முறையில்த பிரித் தெடுத்து வெற்றி கண்டு, இப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுள்ளனர். இதனால் உயர்ரக 'Beta-Glucan' ஐ ஒரு ஆதுர உணவாகவும், உடல் நலம் பேணும் உணவுச் சத்தாகவும், குறைந்த விலையில் சந்தைப் படுத்தக்கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது.

'Beta-Glucan' மாப்பொருள், புரதம் ஆகியவற்றுடன் இணைந்து காணப்படுவதால் இதைத் தனியாகப் பிரித் தெடுப் பது சிரமமாக இருந்தது. வழமையான பிரித்தெடுப்புமுறைகள் 'Beta-Glucan' இன் அமைப்பைச் சீர்குலைத்து அதன் உடல்நலம் பேணும் தன்மையையும் குறைத்துள்ளது. மேற்கூறப்பட்ட இரு பேராசிரியர்களும் 'Beta-Glucan' ஐமுதல் பிரித்தெடுப்பதற்குப் பதிலாக, அதனுடன் இணைந்துள்ள மற்றைய சேர்வைகளைப் பிரித்து, அதைத் தனிப்படுத்தினர். இதனால் எஞ்சிய பகுதி மிகச் செறிவான, உயர் ரகமான 'Beta-Glucan' ஐக் கொண்டிருந்தது. அதை அவர்கள் 'Visco-Fiber' என வர்த்தக ரீதியில் அடையாளப்படுத்தினர். 'Visco-Fiber' இன் உயர்ரகம், அதன் தடிப்புத் தன்மையிலும், செறிவிலும் தங்கியுள்ளது. இதனால் உணவு தயாரிப் பாளர்கள், தயாரிப்பின் போது உணவுப் பொருட்களில் சிறிய அளவிலான 'Visco-Fiber' ஐப் பயன்படுத்தி விரும்பத்தக்க உடல் நலப் பெறுபேறுகளைப் பெறக்கூடிய தாகவுள்ளது. சாதாரணமாக ஒருவர் அதிகளவு 'ஓட்ஸ்' தவிட்டை அல்லது மாவை உட்கொண்டே சிறிய அளவிலான உடல் நலப் பேற்றைக் பெறக்கூடியதாக இருந்தது.

'Visco-Fiber' இன் கொலஸ்ரோல் குறைப்புச் சக்தியை விஞ்ஞான ரீதியாக நிரூபிக்க பெரியளவிலான ஆய்வுகூடப் பரி சோதனைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் முடிவுகளை 'U.S' உணவு- மருந்தக நிர்வாகத் துறைக்குச் (FDA) சமர்ப்பித்து Health-Canada வின் அங்கீகாரத்தைப் பெற்று, உணவு முகவரிகளில் (Food Labels) 'Visco-Fiber' இன் உடல்-நலம் பேணும் ஆற்றலை உறுதிப்படுத்துவதே அடுத்தபடி முறையாகும்.

பேராசிரியர்கள் Dr.தவா வசந்தன் Dr.பெரால் ரிமெலி ஆகிய இருவரினதும் தொழில்நுட்ப முறையால் இன்று பலவகையான உடல்நலம் பேணும் பானங்களையும் இடைவேளை உணவு வகைகளையும் (Snacks) இனிப்புப் பண்டங்களையும் அல்பேட்டா மாகாணத்தில் விளைவிக்கப்படும் தானியங்களை மூலப் பொருளாகக் கொண்டு தயாரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அந்நாட்டின் பொருளாதாரமும் பெரிதும் வளம் பெறவுள்ளது.

பேராசிரியர் Dr.தவா வசந்தன் இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விவசாயத் துறையில் பட்டப்படிப்பைப் பயின்றவரும், முன்னைநாள் இலங்கை வங்கி முகாமையாளரும், தற்பொழுது கனடாவில் வசிப்ப வருமானசெல்லையா தவரத்தினம் ஆசிரியை மீனா தவரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வருமாவார். (து)

## சிறுவிளம்பரம்

### பெயர் மாற்றம்

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் என்ற முகவரியைச் சேர்ந்த நாராயணன் இராசபட்சம் (தே.அ.அ.இல 730874294 V) ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து நாராயணன் இராசகுமார் என மாற்றியுள்ளேன் என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன். நா.இராசகுமார். சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். (402)

## க.கா.குழுத்தலைவராக ஹென்றிக்சன் பதவியேற்பு

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கான புதிய தலைவராக மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் நேற்று முன்தினம் முதல் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

சுவீடனைச் சேர்ந்த இவர் புதிய பதவியினைப் பொறுப்பேற்றுள்ளதையடுத்து பதவியிலிருந்து விலகிக்கொள்ளும் ஹக்றூவ் ஹொக்லண்ட், எதிர்வரும் 7ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார்.

2002ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையினையடுத்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணிகளை இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்கும் மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை ஹக்றூவ் ஹொக்லண்ட் சுமார் மூன்று வருடங்களாக கண்காணிப்புக் குழுவின் தலைவராக பதவி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

## இராசி பலன்

**03.04.2006**
**(பங்குனி 20, திங்கட்கிழமை)**
**பஞ்சமி முற்பகல் 9.19 மணிவரை**
**ரோகினி பிற்பகல் 4.35 மணிவரை**
**இராகுகாலம் 7.40-9.10 மணிவரை**
**சுபநேரம் 12.10-1.40 மணிவரை**
**சஷ்டி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம், கல்வியில் ஆர்வம், மனச் சஞ்சலம், எடுத்த காரியம் தாமதமாகும். |
| இடபம் | மனோதைரியம், காரியநன்மை, நற்கீர்த்தி, கூட்டுமுயற்சி. |
| மிதுனம் | அதிகசெலவு, ரோகநிலை, திடீர் நன்மை, மனோசங்கடம். |
| கடகம் | நலல முயற்சி, வெகுமானம், செல்வாக்கு, தெய்வசிந்தை. |
| சிங்கம் | பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், உஷ்ணநிலை, சுபசெலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, தானியசேர்க்கை, மகிழ்ச்சி, சயனசுகம். |
| துலாம் | பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய சித்தி, தேகநலன், நன்கொடை. |
| விருச்சிகம் | புதியதிருப்பம், குடும்பக்கவலை, பணவிரயம், பிரயாணம். |
| தனுசு | கா்ரிய தடங்கல், அபகீர்த்தி, தர்மம், போசனசுகம். |
| மகரம் | தனலாபம், உறவினர் சந்திப்பு, பிறருக்கு உதவுதல், நல்ல முயற்சி. |
| கும்பம் | காரிய அனுகூலம், பெருமையடைதல், தேகநலன், போசனசுகம். |
| மீனம் | முயற்சி தாமதம், பொருள்விரயம், கௌரவக்குறைவு, விருந்துபசாரம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

## இந்திய கடற்பரப்பில் வைத்து 9 இலங்கை மீனவர்கள் கைது;

இந்திய கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 9 இலங்கை மீனவர்களை இந்திய கரையோர காவலில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

சென்னைக்கும், கடலூருக்கும் இடையேயுள்ள கடற்பரப்பில் தமது வழமையான ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோதே தாம் இவர்களை கைதுசெய்ததாக இந்திய காவற்படையின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்களையும் அவர்களது இரண்டு மீன்பிடி படகுகளையும் சென்னை துறைமுகத்திற்கு கொண்டு சென்று அங்கு ஆரம்ப விசாரணைகள் நடத்தப்பட்டு பின்னர் இவர்கள் அனைவரும் சென்னைப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## புலிகளுக்கு கடற்பிரதேச உரிமை இல்லை என்கிறது இலங்கை அரசு

திருகோணமலை கடற்கரைப் பிரதேசத்திலிருந்து 750 மீற்றர் தூர கடல் வலயத்திற்குள் விடுதலைப்புலிகளின் படகுகள் பயணிப்பதற்கு அனுமதியளிக்க முடியாது என போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் பாதுகாப்புத்தரப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

750 மீற்றர் தூரக் கடற்பரப்பு தங்களுக்கு சொந்தமான கடல் வலயத்திற்கு உட்பட்டது என்று விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் அதனை அரச தரப்பினர் நிராகரித்துள்ளனர். குறித்த கடற்பரப்பில் புலிகளின் படகுகள் பயணிப்பதற்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் திருகோணமலை சம்பூர் கடற்கரைப் பிரதேசம் தங்களுக்குச் சொந்தமானது என்றும் போர்நிறுத்த ஒப்பந்தத்தினால் அதற்கு எதுவித பாதிப்பும் ஏற்படவிலலை என்றும் விடுதலைப் புலிகள் கண்காணிப் புக்குழுவிற்குத் தெரிவித்துள்ளனர்.

எனினும் கடல் வலயம் சம்பந்தமாக தற்போதைய அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் எதுவித உடன்பாட்டினையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்று அரச தரப்பினர் கூறிகின்றனர். மேலும் விடு தலைப் புலிகளின் ஆயுதப்படகுகள் திருமலை கடற்பிர தேசத்திற்குள் வருவதை தடுக்குமாறும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவை கடற்படை அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர் என்றும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது. (க)

## வட்டு.இந்து வாலிபர் அணி 7ஆவது தடவையாகவும் சம்பியன்

வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிற்கிடையே நடாத்தப்பட்ட தடகளப் போட்டியில் வட்டு இந்து வாலிபர் சங்க விளையாட்டு அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

மேற்படி பிரதேச தடகளப் போட்டியில் தொடர்ந்தும் ஏழாவது தடவையாக வட்டு இந்து வாலிபர்சங்க அணி வெற்றியீட்டியுள்ளது. இவ் அணி இம்முறை 134புள்ளிகளைப் பெற்று தடகளப்போட்டியில் பிரதேச சம்பியனாகியுள்ளது.


இப் போட்டியில் வட்டு இந்து வாலிபர் சங்க அணியைச் சேர்ந்த கே.சுதர்சன் சிறந்த சுவட்டு வீரனாகவும், எஸ்.பார்த்தீபன் சிறந்த கள வீரனாகவும், எஸ்.ஸ்ரீ சக்தி சிறந்த கள வீராங்கனையாகவும் அராலி மாவத்தை விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ரி.தயாளினி சுவட்டு வீராங்கனையாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேற்படி போட்டியில் இவ்வாண்டுக்கான சிறந்த தடகள விளையாட்டு வீரனாக வட்டு இந்து வாலிபர் சங்க விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த எஸ்.பார்த்தீபன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## பொலிஸார் கைது

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த போக்குவரத்து பொலிஸ் கண்ஸ்டபிள் ஒருவரை லஞ்ச ஊழல் ஆணைக்குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

போக்குவரத்துத் தொடர்பான குற்றமொன்றை இழைத்தவரிடமிருந்து ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெறும் பொழுதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (க-7)



யாழ்ப்பாணம் நீதிமன்ற நியாயாதிக்கத்துக்குள் அமைந்துள்ள சிறுவர் இல்லப் பொறுப்பாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன், பதிவாளர் க.மீரா மற்றும் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர்கள், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள், சிறுவர் உரிமை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஜனநாயகத்தை மதிக்காத தீர்வானது தீவிரவாத சக்திகளை பலப்படுத்திவிடும்

## ஜனாதிபதி மஹிந்த இஸ்லாமாபாத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜனநாயக செயற்பாடுகளையும் மனித உரிமைகளை மதிக்காததுமான ஒரு தீர்வானது எமது நாட்டின் பயங்கரவாத சக்திகளைப் பலப்படுத்துவதற்கே வித்திடுமென்று தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனைவருக்கும் கௌரவத்தை வழங்கக்கூடியதும் நீடித்து நிலைத்திருக்கக் கூடியதுமான சமாதானத்தை உருவாக்குவதற்குமென அரசு முயற்சி செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற அரச விருந்துபசாரத்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது ஐக்கிய இலங்கைக்குள் எமது மக்கள் அனைவரினதும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதான தீர்வொன்றை அடைவதற்கு அனைத்துக் கட்சிகளையும் குழுக்களையும் ஈடுபடுத்தியே அதனை செய்து கொண்டிருக்கின்றோம்.

இங்கு சர்வதேசத்தின் பங்களிப்பினை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சர்வதேச சமூகமானது ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக நடத்தை முறைமைகளை வேரறுக்கும் தீவிரவாத சக்திகளுக்கு இடங்கொடுக்காமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

எமது பிரச்சினைகள் பற்றிய புரிந்துணர்வை பெற்றிருப்பதன் நிமித்தமும் எப்போதும் உங்களுடைய உதவிகளை வழங்கியதற்காகவும் இச்சந்தப்பத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நவீன இஸ்லாமிய நாடு என்ற வகையில் பாகிஸ்தான் பொருளாதார சமூக முன்னேற்ற இலக்கைநோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறது.

நாம் உங்களுடைய அறிவுசார் நடுநிலைத்தன்மை என்ற கருத்துருவை பெரிதும் பாராட்டுகின்றோம். அது பாரம் பரியத்தினதும் நவீனத்தினதும் கலவையாகும்.

உங்களுடைய தலைமைத்துவத்தில் நாட்டின் பிதாவான குவாதியே ஆஸம் மொஹம்மட் அலி ஜின்னாவின் தொலை நோக்கை பாகிஸ்தான் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம். சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தினையடுத்து எம்மிரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் வளர்ச்சியடைந்து இருக்கிறது. எமது ஏற்றுமதிகளும் அதிகரித்துள்ளன.

பொருளாதார வர்த்தக உறவுகளை மேலும் பலப்படுத்த முயற்சிசெய்வோம். கூட்டு வர்த்தக முயற்சிகளை ஊக்குவிக்கவும் பொருளாதார முதலீடுகளை மேலும் அதிகரிப்பதற்கும் எமது வர்த்தக தூதுக்கு தற்போதைய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளும் என நான் நம்புகின்றேன்.


நாங்கள் இன்று கையொப்பமிட்ட உடன்படிக்கைகளுடன் எமது இரு நாடுகளுக்குமிடையிலான ஒப்பந்தம் மேலும் முன்னெடுத்துச் செல்லப்படும் எமது இரு நாடுகளிலும் கல்வி நிலையங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு நடவடிக்கைகள் பற்றி நாம் ஆராய்தல் வேண்டும்.

சுற்றுலாத்துறையினூடாக பொருளாதார சுபிட்சத்தையும் பரஸ்பர புரிந்துணர்வையும் ஏற்படுத்தக்கூடிய சாத்தியங்களைப் பயன்படுத்துவதற்கு நாங்கள் இணங்கியிருக்கின்றோம். எமது மதிப்பு வாய்ந்த கலாசாரங்களில் பொதிந்துள்ள அறிவையும் ஞானத்தையும் பரிமாறிக்கொள்வதன் மூலம் பரஸ்பரம் வளமூட்டுவதற்கு இணங்கியிருக்கிறோம்.

எமது ஒத்துழைப்பும் மற்றும் இருபக்க உறவுகளை வலிமைப்படுத்தியிருந்தபோதிலும் தெற்காசிய பிராந்தியம் உலகத்தின் மிகவும் வறுமைமிக்கதாகக் காணப்படுகிறது.

ஏழ்மையை போக்குவதற்கு பிரதேச பொருளாதார கட்டுக்கோப்பு ஒன்றினை உருவாக்குவதோடு பிராந்திய பொருளாதாரம் ஒருங்கிணைப்பை ஊக்குவிக்க வேண்டும் என்பதும் அத்தியாவசியமானதென்பது எமது உறுதியான நம்பிக்கையாகும்.

கடந்த வருடம் டாக்காவில் நடைபெற்ற சார்க் உச்சி மாநாட்டடின்போது தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த குறிப்பிடத்தக்க உடன் படிக்கையும் ஏற்கனவே எமக்கிடை யில் இருந்த இருபக்க சுதந்திரவர்த்தக உடன் படிக்கைகளும் எமது மக்களின் பொருளாதார ஆற்றல் வளங்களையும் சக்திகளையும் பயன்படுத்திக் கொள்ள உதவியாக அமையும்.



சமாதானம், பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி ஆகிய மூன்றும் மனித முன்னேற்றத்துக்குரிய மூன்று பெறுமானங்களாகும் அபிவிருத்தி இலக்குகள் என்ற வகையில் அவை ஒன்றோடொன்று தொடர்புடையவை. அத்துடன் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பவை பொருளாதார சமூக முன் னேற்ற இலக்குகள் மீது சாவல்விடுவதானது சமாதானத்திற்கும் பாதுகாப்புக்கும் சவால் விடுவதாகும். சமாதானத்துக்கும் பாதுகாப்புக் குமான அச்சுறுத்தல் ஏக காலத்தில் சமூக பொருளாதார அபிவிருத்திகளுக்கு சாவல் விடுவதாகும் எனத்தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை இனப்பிரச்சினை குறித்து பாகிஸ்தான் ஜனாதிபதிபர் வேஷ் முஷாரப்புடன் கலந்துரையாடிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்பு ஒத் துழைப்பு குறித்தும் பேச்சு நடத்தியிருப்பதா கத் தெரிய வருகிறது.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜய மாக கடந்த வெள்ளியன்று பாகிஸ்தான் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந் நாட்டு ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பை சந் தித்து பேச்சு நடத்தினார்.

இந்த சந்திப்பின்போது இலங்கை இனப் பிரச்சினை குறித்து இரு நாட்டுத் தலைவர் களும் கலந்துரையாடியதுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்தும் பேச்சு நடத் தியிருப்பதாகத் தெரிய வருகிறது.

ஜிகாத் குழு என்ற பெயரில் கிழக்கில் முஸ்லிம்கள் ஆயுதப் பயிற்சிபெறுவதாகவும் பாகிஸ்தான் புலனாய்வு பிரிவினரின் உதவியுடனேயே இந்த குழு இயங்குவதாகவும் அண்மையில் அவுஸ்திரேலிய தொலைக் காட்சிப் பேட்டியின் போது விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்நிலையில் பாகிஸ்தானுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சென்றிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பாகிஸ்தான் விஜயத்தின்போது சுற்றுலா, கல்வி, வர்த்தக உறவுகள் குறித்து பேச்சு நடத்தி வரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலை மையிலான குழுவினரும், இனப்பிரச் சினை விவகாரத்தில் பாகிஸ்தானின் நிலைப் பாட்டை அறிந்துகொள்வதோடு இலங்கை இனப் பிரச்சினை குறித்து அந்நாட்டு அதிகாரிகளுக்கு விளக்கமளித்து வருவதாகவும் தெரியவருகி றது.

இதேவேளை, பாகிஸ்தானும் இலங்கையும் பாதுகாப்பு ஒத்துழைப்பில் நெருங்கிச்செயற்பட முயல்வதானது இந்தியாவின் கவ னத்தை வெகுவாக ஈர்த்திருப்பதாகத் தெரிவித் துள்ள இராஜதந்திர வட்டாரங்கள் பாகிஸ்தானுடன் இலங்கை மேற்கொள்ள விருக்கும் பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் உள்நாட்டு விவகாரங்களில் பாகிஸ்தானின் தலையீடு போன்றனவற்றுக்கு இலங்கையி டம் இந்தியா நேரடியாக தனது எதிர்ப்பைத் தெரிவிக்கலாமென்றும் தெரிவித்தன. (க)


நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது

**திருமறைக் கலாமன்றம்**

தயாரித்து வழங்கும்

தவக்கால ஆற்றுகை

மன்ற அரங்கில்

**பலிக்களம்**

மாலை 7.00மணி

(திருப்பாடுகளின் காட்சி)

**5,6,7,8,9 ஏப்ரல் 2006**

(புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு -5 நாள்களுக்கு)

பார்வையாளர்களுக்கு

★ குறிப்பிட்ட நாள்களில் மாலை 7.00மணிக்கு திருப்பாடுகளின் காட்சி ஆரம்பமாகும் பார்வையாளர்கள் மாலை 6.15 முதல் அரங்கினுள் அனுமதிக்கப்படுவார்கள்.

★ ஆசனங்களுக்கான பதிவுகளை யாழ்.மன்ற அலுவலகத்தில் செய்து கொள்ளலாம் குறிப்பாக தூர இடங்களில் இருந்து வரும் பார்வையாளர்கள் முன்னதாகவே ஆசனங்களுக்கான பதிவுகளை செய்து கொள்வது விரும்பத்தக்கது.

★ ஆசனப் பதிவுகளுக்கான அன்பளிப்பு : புதன், வியாழன், வெள்ளி 30.00 சனி, ஞாயிறு 40.00

இறைமகனின் கல்வாரிப் பயணத்தில் இணைந்திட

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழப்பாணம்,
தொலைபேசி :021 222 2393

(C/அ/276)

-திருமறைக்கலாமன்றம்


## சபாநாயகர் அமைப்பின் தலைவராக ஜே.எம்.லொக்கு பண்டார தெரிவு

(கொழும்பு)

இலங்கையின் சபா நாயக்கர் டபிள்யூ ஜே.எம். லொக்கு பண்டார, சார்க் நாடுகளைச் சேர்ந்த சபா நாயகர் அமைப்பின் தலைவராக ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற விசேட கூட்டத்தின் போது லொக்குபண்டாரவுக்கு இந்த பதவி வழங்கப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த 29ஆம் திகதி கொழும்பில் சார்க் நாடுகளைச் சேர்ந்த சபாநாயகர்களது மாநாடு ஆரம்பமானது.

சார்க் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பையும் பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய உறவுகளை கட்யெழுப்பி நெடுங்கிய தொடர்புகளைக் கொண்டுசெயற்படுவதற்கும் தாம் எண்ணியுள்ளதாக சபா நாயக்கர் இதன் போது சுட்டிக்காட்டினார். (க-9)

## கணனித்தொகுதி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்துக்கு லயன் நிமால் ராஜபக்ஷ கணனித் தொகுதி ஒன்றிணை அன்பளிப்புச் செய்துள்ளார்.

வித்தியாலயத்தின் அதிபர் க.அருள்சோதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் -லயன் நிமால் ராஜபக்ஷ இக் கணனித் தொகுதியை சம்பிரதாயபூர்வமாக இயக்கிவைத்தார்.

இந் நிகழ்வின் போது சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 B மாவட்டத் தலைவர் லயன் சரத் குணசேகரா நீரிழிவுத் திட்ட மாவட்டத் தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் ஆகியோரும் பங்குகொண்டிருந்தனர். (து-16)

# இன்று ஒரு தகவல்

## விண்வெளியும் மன நிலையும்

ஒரு 20 அடி நீளம் 18அடி அகலமுள்ள அறைக்குள் இரண்டு பேரை வைத்துப் பூட்டுங்கள் அவர்களுக்கும் வெளி உலகத்திற்கும் எந்த விதமான நேரடித் தொடர்பும் இருக்கக்கூடாது. எல்லாவற்றையும் துண்டுடித்துவிடவேண்டும் இரண்டுமாதம் வரைக்கும் அவர்களை வெளியில் விடக்கூடாது இப்படி செய்து விட்டால் ஒருகொலை விழுவதற்கான சுழ்நிலையை உருவாக்கியாயிற்று என்று அர்த்தம்.

ரஷ்ய விண்வெளிவீரர் ஒருவர் எழுதி வைத்திருக்கும் டயறிக்குறிப்பு இது அவரது பெயர் வாலரிநியுமின் 1980 இல் இன்னொருவருடன். விண்வெளிக்குப் போய்விட்டுத் திரும்பிவந்தவர் இவர். அவர் கூறுவதில் ஒன்றும் ஆச்சிரியமில்லை வெளி உலகத்தொடர்பே இல்லாமல் இரண்டு பேரை ஒரே அறையில் பூட்டிப் போட்டுவிட்டால் கொஞ்ச நாளில் ஒருவரை ஒருவர் கொன்று விடலாமா என்ற வெறிவந்து விடுமாம்.

ரொக்கெற்றில் விண்வெளிக்குப் போய்கொஞ்சநாளில் அங்கேயே இருந்து விட்டுத் திரும்பி வருபவர்கள் அப்படித்தான் ஒரு மாதிரி ஆகிவிடுகிறார்களாம். அவர்களின் மன நிலை மிகவும் பாதிக்கப்படுகிறதாம் ரொக்கெற்றில் மிகவும் துணிச்சலாகத்தான் புறப்படுகிறார்கள். இருந்தாலும் அது போகும் பாதையோ எல்லையில்லாமல் விரிந்து கிடக்கும் வானம் அங்கே என்ன நடக்கும் என்பது யாருக்கும் தெரியாது. எந்த கணனியும் அதைத் துல்லியமாக கணக்குப் போட்டுச் சொல்ல முடியாது. பயணம் செய்யும் ரொக் கெற்றில் ஏதாவது கோளாறு என்று வைத்துக் கொள்ளுங்களேன் உடனே அதை ஓரமாகப் போட்டு விட்டு பழுது பார்க்கவா முடியும் போனால் போனது தான்.

நெஞ்சு நிறைய இழுத்து சுவாசிப்பதற்கு காற்றும் கிடையாது. பகலாக இருந்தால் கடுமையான வெப்பம் இருக்கலாம். இரவாக இருந்தால் இதுவரை நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு இருள் கடுமையாக இருக்கலாம். இதுபோன்ற அபாயத்தையெல்லாம் மனதில் கற்பனை செய்து பார்த்துக் கொண்டேதான். விண்வெளிவீரர்கள் ரொக்கெற்றில் புறப்படுகிறாாகள் அதுமட்டுல்ல ரொக்கெற் எவ்வளவு பெரிது? ஒரு சிறிய கூடுதானே. அதற்குள் சில சமயம் தனியாகவே போகவேண்டியிருக்கும் உள்ளேயிருந்து அழுதாலும் சிரித்தாலும் தரையிலிருந்துதான் பதில் வரவேண்டும் சில சமயம் ரொக்கெற்றில் இரண்டு பேராகப் போகும் போது கூட பிரச்சினை தீராது.

ஒரேமாதிரியான வாழ்க்கை... அடுத்து என்ன நடக்குமோ என்ற அபாய உணர்வு இதெல்லாம் சேர்ந்து கொண்டு அவர்களின் மனதை என்னவோ செய்யும். ஒருவருக்கு இன்னொருவடைய போக்கு சகிக்க முடியாததாகக் கூட ஆகிவிடும். அடுத்தவர் ஒழுங்காக இருந்தால் கூட இவருக்கு ஆத்திரம் வரும் அப்படியே அவர் மேல் பாய்ந்து விழுந்து குரல் வளையை நெரித்துக்கொன்று விடலாமா,? என்று தோன்றும் 1982 ஆம் ஆண்டு இரண்டு விண்வெளி வீரர்கள் ஒரே விண்கலத்தில் புறப்பட்டார்களாம்.

அதற்குள் அடிவைத்ததிலிருந்தே அவர்களிலிருவருக்கும் ஆகாமல் போய்விட்டதாம் இரண்டுபேரும் கிட்டத்தட்ட பேசிக்கொள்வதே இல்லையாம். மிகவும் அவசியம் என்று வந்தால் ஒருவார்த்தை இரண்டு வார்த்தை பேசிக்கொள்வார்களாம் அவ்வளவுதான் இப்படி ஒரு புழுக்கமான இறுக்கமான மௌனமான சூழ்நிலையிலேயே விண்வெளியில் 211 நாளைக் கடத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் இருவரும் ஆகாயத்திலேயே 211 நாள் இருந்தார்கள்... பூமியிலிருந்து யாராவது அங்கு போய்ச் சேர்ந்தால் அவரிடம் இருவரும் சந்தோஷமாகப் பேசுவார்களாம் சந்தோஷமாக இருபபதாகவும் காட்டிக்கொள்வார்களாம். இவர்கள் பூமிக்குப் புறப்பட்டால் மறுபடியும் அவர்கள் மௌனமாகி விடுவார்களாம் இபபடியேபல்லைக்கடித்துக்கொண்டு 211 நாளையும் ஒரு மாதிரிக் கடத்திவிட்டு அப்பாடா... தப்பித்தோம்... என்று பூமிக்கு வந்து சேர்ந்தார்களாம். அந்த இரண்டு பேரில் ஒருவர் இதையெல்லாம் டயறியில் குறித்து வைத்திருக்கிறார் அது 1988இல் சோவியத் யூனியனில் புத்தகமாகக் கூட வந்திருக்கிறது.

விண்வெளி வீரர்கள் தரையிங்கியவுடன் அவர்களது இரத்தத்தைச் சோதித்துப் பார்க்கும் போது... அதில் ஹைட்ரோ காட்டிடுசோன், காட்டிகோலமின் போன்றவை இருப்பது தெரியவந்ததாம் இதெல்லாம் சாதாரணமாக மனிதர்கள் பதற்றமடையும் போது இயல்பாக உடலில் சுரக்கும் வேதியியல் பொருட்கள் பதற்றமடைந்த ஒருவர் ஓய்வெடுக்கும் போது இந்தப் பொருடக்ள் இயல்பாகவே மறைந்துவிடும். ஆனால் விண்வெளி வீரர்கள் இரதத்தில் இந்தப் பொருட்கள் எப்போதும் இருக்கிறதாம். அதனால் அவர்கள் சிடுமூஞ்சி ஆகிவிடுகிறார்களாம் கூட வருபவர்கள் செய்யும் சிறுதப்பைக் கூட அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லையாம். இது உளவியல் நிபுணர்களின் கருத்து.

அவர்களெல்லாம் விண்வெளிக்குப் போவதனால் 'சிடுமூஞ்சி' என்று பெயர்வாங்குகிறார்களாம் நாமெல்லாம் வீட்டுக்குள்ளேயே சிடுமூஞ்சி என்று பெயர் வாங்குகிறோம்.

ஒரு அம்மா எதிர்வீட்டுக்கார அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தார் "என் கணவர் சிடுமூஞ்சிதான்... இருந்தாலும் அவரது சட்டையெல்லாம் நான்தான் துவைக்கிறேன்" என்றார். 'அப்படியா?' என்றார் அவர் "ஆமாம் ஆனால் ஒரு விஷயம் நான் துவைக்கும் போது அந்த சட்டைக்குள் அவரும் இருப்பார்" என்றார் இவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மனித உரிமைகள் ஆணையத்தை பாதுகாக்க சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள்!

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தைப் பாதுகாக்க இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை ஆம்னஸ்டி இரைநேஷனல் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பான அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை முழுவதிலும் பாரிய அளவில் மனித உரிமை மீறல்கள் நடைபெறும் நிலையில் முழுமையாக இயங்கக் கூடிய சுயாதீனமான தேசிய மனித உரிமைகள் ஆணையம் அவசியமானது.

மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட டோருக்கான நீதியை இந்த அமைப்பு வழங்கி வந்தது.

தற்போது நாளுக்கு நாள் மனித உரிமைகளுக் கான அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்ந்து இயங்குவதற் கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்து இலங்கை அரசாங்கம் செயற்படவேண்டும்.

இலங்கையின் மனித உரிமைகள் ஆணையம் வலுப்படுத்தப்பட்டு கூடுதலாக நிதி ஒடுக்கீடு செய்தல், முறைப்பாடுகளை நீதி மன்றுக்கு நேரடியாகக் கொண்டு செல் லும் வகையில் அதனது அதிகாரங்கள் விரிவுபடுத்தப்பட்டு சுயாதீனமாக இயங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்ற நீண்டகால செயற்பாடுகளையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண் டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

1996ஆம் ஆண்டு மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்டது.

1997ஆம் ஆண்டு முதல் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை இந்த அமைப்பு மேற்கொண்டுவருகிறது.

10பிரதேச அலுவலகங்களையும் 5 ஆணையாளர்களையும் இந்த அமைப்பு கொண்டுள்ளது. சித்திரவதைத் தடுப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவை 2004ஆம் ஆண்டு மனித உரிமைகள் ஆணையம் ஏற்படுத்தியது.

காணாமல் போனோர் தொடர்பிலான விவரங்களைச் சேகரிக்கும் குழுவை 2005ஆம் ஆண்டு இந்த அமைப்பு உருவாக்கியது. இலங்கையில் அவசரகால சட்டத்தின் கீழ் பொதுமக்களின் மனித உரிமைகள் பாதிக்கப்படுதல் தொடர்பாகவும் இலங்கை அர சாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பான விசாரணைகள் மேற் கொள்வதற்கும் 2006ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி சிறப்புக் குழு ஒன்றையும் மனித உரி மைகள் ஆணையம் அமைத்தது.

இதன் தலைவராக இருந்த ராதிககுமாரசுவாமி அண்மையில் விலகியுள்ள நிலையில் மனித உரிமைகள் ஆணையம் முடங்கியுள்ளது.

புதிய தலைவரை நியமிக்க வேண்டிய இலங் கையின் அரசியல் யாப்புச் சபை இன்னமும் உருவாக்கப் படாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணையம், தேர்தல் ஆணையம், நீதித்துறை ஆணையம், லஞ்ச ஊழல் தடுப்பு ஆணையம் ஆகியவை அனைத்தும் இலங்கையின் அரசியல் யாப்புச் சபையின் கீழ் அமைக்கப்படுவதால் அதனது பதவிக்காலம் முடிவடைந்த பிறகு புதிய உறுப்பினர்களை நியமிக்க முடியாத நிலை நீடித்து வரு கிறது.

இதனால் இலங்கையின் பொலிஸ்சிறையில் பாரிய குழப்பங்களும் அரசியல் தலையீடும் அதிகரித்துள்ளன.

நீதித்துறை சேவைகள் ஆணையத்தின் இரு நீதிபதிகள் அதிருப்தியில் பதவி விலகியுள்ளதால் நீதித்துறையின் செயற்பாடும் முடங்கியுள்ளது.

இத் தகைய நிலைமைகளைச் சுட்டிக்காட்டி அரசியல் யாப்புச் சபையை உருவாக்க உத்தரவிட வேண் டும் என்று கடந்த பெப்ரவரி 10ஆம் திகதியன்று மேல் முறையீட்டு நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது. என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க)

# "சிறுவர் உரிமைகள் நிகழ்ச்சித் திட்டம்" தொடர்பான 6 மாத காலப் பயிற்சி

## விழி உளசமூக மேம்பாட்டு அமையம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

விழி உள சமூக மேம்பாட்டு அமைய நிறுவனமானது சிறுவர் பாதுகாப்பு இலங்கையின் அனுசரணையுடன் கடந்த இரு வருடங்களாக யாழ். மாவட்டத்திலுள்ள பல பகுதிகளிலும் பல்வேறு உளசமூக வலு வூட்டல் திட்டங்களையும் பல கிராமங்களில் சிறுவர் கழகங்கள் அமைத்து அதனூடாக மாற்றீடான முரண்பாட்டுத் தீர்வுத் திட்டம் என்னும் செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதுடன் அவர்களுடைய சுயதிறன்களை வெளிக் கொணர்ந்து தலைமைத்துவ பண்புகளை வளர்க்கும் செயற் பாடுகளையும் நடைமுறைப்படுத்தி வருவது தெரிந்ததே.

2006ஆம் ஆண்டு சிறுவருக்கான ஆண்டாக இலங்கை அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது இவ்வாண்டில் சிறுவர் தொடர்பான பல்வேறு விடயங்களையும் இவ்வமையம் முன்னெடுக்கவுள் ளது.

அவற்றில் ஒன்றாக சிறுவர் உரிமைகள் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான பன்னிரண்டு நாட்களுக்கான பயிற்சி ஒன்றையும் இவ்வமையம் வழங்கவுள்ளது.

இப்பயிற்சியானது ஒவ்வொரு மாதமும் இரு தினங்கள் என்ற வகையில் ஆறுமாதங்களுக்கு வதிவிடப் பயிற்சியாக வழங்கப்படவுள்ளது.

இப் பியிற்சியில் கலந்துகொள்ள பத்திரிகையாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. முதலாவது பயிற்சியானது எதிர்வரும் 6,7ஆம் திகதிகளில் விழி அலுவலகத்தில் ஆரம்பமாகும். (க–132,133)

# பெயர் நீக்கப்பட்ட வேட்பாளருக்கு ஐ.தே.கட்சி எம். பிக்கள் கையூட்டு

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹரூப் தனக்கு 5 இலட்ச ரூபா காசோலையை வழங்கியுள்ளார். என்று கொழும்பு நகரசபை உறுப்பினரான ரி.எம்.சங்கதாஸ ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகர சபைக்கான வேட்பாளர் பட்டியலில் 18வயது பூர்த்தியடையாத ஒருவரை சேர்த்துக் கொண்டமையினால் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியல் நிராகரிக்கப்பட்டது.

கொழும்பு நகர சபை உறுப்பினரான ரி.எம்.சங்கதாசவின் பெயரை வேட்புமனுவிலிருந்து நீக்கிவிட்டு அந்த இடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் மஹரூபின் ஆதரவாளரான 18வயது பூர்த்தியடையாத ஒருவரை சேர்த்துக்கொண்டமையினாலேயே அந்த வேட்புமனு நிராக்ரிக்கப்பட்டது.

வேட்புமனு நிராகரிப்பு தொடர்பில் கொழும்பு பாராளுமன்ற உறுப்பினர்களான மஹரூப் மற்றும் மிலிந்த மொறகொட ஆகியோருக்கு எதிராக குற்றச்சாட் டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் கடந்த 24ஆம் திகதி தனது செல்லிடத் தொலைபேசியில் தொடர்புகொண்ட பாராளுமன்ற உறுப் பினர் மஹரூப் தன்னையும் மிலிந்த மொறகொடவையும் தாக்குவதை நிறுத்துமாறும் தேவையான எதனையும் செய்வதற்கு தான் தயாராக இருப்பதாகவும் கூறிய தாக சங்கதாச கூறியுள்ளார்.

சிறு பரிசை தபால் பெட்டியில் வைத்திருப்பதாகவும் இதனைப் போன்று பத்து மடங்கு பரிசுகளை தருவதற்கும் தயாராக இருப்பதாக மஹரூப் கூறியதாகவும் சங்கதாச தெரிவித்துள்ளார்.

தபால் பெட்டியைத் திறந்து பார்த்த போது 5இலட்சத்திற்கான காசோலை இருந்ததாக தெரிவிக்கும் சங்கதாச தன்னை யாரும் விலைகொடுத்து வாங்க முடியாது என்றும் இது குறித்து முதலில் ஊடகங்களுக்குத் தெரிவிப்பதாகவும் பின்னர் மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் கூறினார். (க)

# மீன்பிடி நடவடிக்கைகள் குறித்து வர்த்தமானியில் அறிவிக்கப்படும்?

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் மீனவர்கள் மீன்பிடி தொடர்பாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து வர்த்தமானி அறிவித்தலொன்று அரசாங்கத்தினால் பிரசுரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சட்டதிட்டத்திற்கு அமைய மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கைகள் பிரதேச ரீதியாக பிரிக்கப்படலாம் என்று நம்பப்படுகின்றது.

அதேவேளை, துறைமுகங்களைச் சுற்றியுள்ள அதியுயர் பாதுகாப்பு வலையத்தின் விஷ தீரணங்கள் மேலும் அதிகரிக்கப்படலாம் என்று அகில இலங்கை மீன்பிடி தொழிற்சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, துறைமுகங்களுக்கு நேராகவுள்ள 12 கடல் மைல்பிராந்தியத்திலும் மீன்பிடி தொழில் செய்வதற்கு தடை ஏற்படலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க–9)

# உறுதிமொழிகளை வழங்கிவிட்டு உதவ தயங்கும் சர்வதேச நிறுவனங்கள்

சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் புனர்வாழ்வுக்காக பல்வேறு செயல் திட்டங்களை ஆரம்பிக்கவென உறுதி வழங்கிய பல சர்வதேச மட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள், இதுவரை அங்கு எதனையும் மேற்கொள்ளாத நிலையில் கிராமங்களை அநாதரவாக விட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எத்தகைய உதவிகளையும் பெறாத நிலையில் இருந்து வருவதும் தெரியவந்துள்ளது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பல ஆக்கபூர்வமான செயல் திட்டங்களை அமுல்செய்யவென ஆர்வத்துடன் முன்வந்திருந்த பல நிறுவனங்கள் கடந்த ஒரு வருட காலத்தில் பெயரளவுக்கு தேவை மதிப்பீடுகளையும், சூழ்நிலைப் பகுப்பாய்வுகளையும் செய்வதாகக் கூறிச் சென்றனவே தவிர எதனையும் ஆக்கபூர்வமாகச் செய்யவில்லை எனத் தெரியவருகின்றது.

இதன்காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுதிமொழிகளை நம்பியிருந்து ஏமாற்றமடைந்தமையே அனுபவமாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதமிருக்க சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு ஒரு சில புதிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் அவர்களின் தொழில் பணிக்குப் பயன்படுத்த முடியாத உபகரணங்களைப் பல ஆயிரம் ரூபாய்களுக்கு கொண்டுவந்து வழங்கியுள்ளன.

ஆயினும் இவ்விதம் வழங்கப்பட்ட கடல் தொழில் உபகரணங்களை கடற்றொழிலாளர்கள் இதுவரையும் பயன்படுத்தாது தமது வளவுகளில் அநாதரவாக விட்டுள்ளனர். இதுகுறித்து அவர்களிடம் விசாரித்த சமயம்,

வடபகுதிக் கடலில் பயன்படுத்த இலாயக்கற்ற கடல்தொழில் உபகரணங்களைப் பயன்படுத்துவதால் எமது உயிர்களையே பாதிப்படையச் செய்யும் நிலைதான் ஏற்படும் எனத் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் பல சர்வதேச மட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் சுனாமி உதவித் திட்டத்தின் கீழ் பணியாற்றி வருகின்றபோதிலும்கூட, நிரந்தர அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட வகையில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு உதவிகளை வழங்கவில்லை எனத் தெரிய வருகின்றது.

இந்த வகையில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் கத்தி வகைகளையும், கூடை வகைகளையும் வழங்கி பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களை மென்மேலும் தங்கு நிலையில் வைத்திருக்கின்றன என அறியப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, சுனாமிப் பேரலை இடம்பெற்ற சமயம் மாவட்டத்திற்கு வருகை தந்திருந்த பல சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இப்போது இங்கில்லாமல் சென்றுவிட்டன எனவும் நம்பப்படுகின்றது. (க-16)

# மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை!

(கொழும்பு)

ஆரம்ப தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தை அபிவிருத்தி செய்வதற்காக வேலைத் திட்டமொன்றை கல்வி அமைச்சின் ஆரம்ப கல்விப் பிரிவு அமுல்செய்யவுள்ளது.

வாசிப்பு ஆற்றலை வளர்ப்பதற்கு மிகப் பொருத்தமான சந்தர்ப்பம் ஆரம்ப கல்விப் பருவமாகையால் அதற்கான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதற்கு ஆரம்ப ஆசிரியர்களின் பங்களிப்பு மிக அத்தியாவசியமானதாகும்.

இதன் பொருட்டு வகுப்பறையில் புத்தகப் பொதிமுறை திட்டத்தை அமுல்படுத்துவது சிறந்ததென யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

புடவையினால் அல்லது பன்னால் செய்யப்பட்ட பொதிகளை சுவரில் ஆங்காங்கே தொங்கவிடுதல், சொற்கள் குறைந்த பெரிய எழுத்துக்களைக் கொண்ட நான்கு நிறங்களிலான பெரிய படங்களைக் கொண்ட புத்தகங்கள் மற்றும் ஓரளவு சிறிய எழுத்துக்கள் அதிக சொற்களைக் கொண்ட வாக்கியங்களி லான புத்தகங்களை தொகுதி தொகுதியாக பொதிகளில் இட்டு வைத்தல் என்பன வாகும்.

புத்தகப் பொதிக்கு பொருத்தமான பெயரை இட்டு அவற்றைப் பாதுகாக்கவும், விநியோகிக்கவும் ஒரு தலைவரை நியமித்துக் கொள்ளல்.

வகுப்பு வேலைகளை முடித்தவர்கள் தாம் விரும்பிய புத்தகத்தை எடுத்து வாசித்தல், கதை கூறல், சித்திரமாக்கல், வினாவிடைப் போட்டி நடாத்துதல், செவிமடுத்தல், புத்தகங்களைப் பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகளில் விருப்பத்துடன் ஈடுபடுத்தல் ஆசிரியரின் கடமையாகும்.

இறுதியாக மதிப்பிடல், ஊக்குவித்தல், பின்னூட்டல் போன்ற விடயங்களையும் திட்டமிட்டுச் செயற்படுத்துவதன் மூலம் மாணவர் தாமே தனியாகப் புத்தகங்களை வாசிக்கவும் தகவல் திரட்டவும் முற்படுவதன் மூலம் கற்றல் செயற்பாட்டிற்கு பெரிதும் துணையாக அமையும். (க-9)

# விசேட சமாதானத் தூதுவர் இன்று இலங்கை வருவார்?

(கொழும்பு)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயின் புதிய விசேட தூதுவர் ஜோன் ஹன்ஸன்போவர் இன்று இலங்கை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் முறையாக இலங்கை வரும் இவர் சமாதானப் பேச்சுவார்த்தைகளுடன் சம்பந்தப்பட்ட பல தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

அதேவேளை, நோர்வேயின் அமைச்சரும் விசேட தூதுவருமான எரிக்சொல்ஹெய்ம் எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை இலங்கை வரவுள்ளார்.

ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வரும் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல முக்கிய பிரமுகர்களை சந்தித்து எதிர்வரும் ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் குறித்து விரிவாக ஆராயவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பின்னர் இந்த இரண்டு இராஜதந்திரிகளும் எதிர்வரும் 7ஆம் திகதி இந்தியா சென்று இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையேயான பேச்சுவார்த்தைகளில் தற்போதைய நிலைமை குறித்து விளக்கமளிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# வெள்ளை வானில் வந்தவர்கள் சிறுவனை கடத்தி சென்றனர்

## மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தாழங்குடாவிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை ஆரையம்பதி இராமகிருஷ்ண மிசன் வித்தியாலயத்திற்கு துவிச்சக்கர வண்டியில் தனியே சென்ற 14 வயது சிறுவன் ஒருவனை வெள்ளை வானில் வந்த கருணா குழுவினர் கடத்திச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கடத்தப்பட்ட சிறுவன் நாகமணி உதயன் (வயது-14)எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வெள்ளிக்கிழமையன்று பாடசாலை விடுமுறை என்பதை அறியாத நிலையில், குறித்த சிறுவன் துவிச்சக்கர வண்டியில் சென்றபோது மண்முனை 5ஆம் கட்டைச் சந்தியில் வைத்து ஆயுததாரிகள் கடத்திச் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த புதன்கிழமை மாணவர்கள் கடத்தப்படுவதைக் கண்டித்து ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினம் ஆரையம்பதி வீதியால் சென்ற இளைஞன் ஒருவரை வழிமறித்த கருணா குழுவினர் நீங்கள்தான் ஹர்த்தால் போடக் காரணம் என அவதூறான வார்த்தைகளால் பேசி குறித்த இளைஞனை கடுமையாக தாக்கியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (க)

# இலட்ச அர்ச்சனையும் விஷேட திரவ்வியஹோமமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் பங்குனி உத்தர இலட்ச அர்ச்சனையும் விஷேட திரவ்வியஹோமமும் நேற்று முன் தினம் ஆரம்பமாகியுள்ளது. இவ்விழா தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

10ஆவது நாள் திங்கட்கிழமை காலை 8.00மணிக்கு நடைபெறுகின்ற 64 உபசார விஷேட பூசை வழிபாட்டுடன் இலட்ச அர்ச்சனை நிறைபெறும்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 7.00மணிக்கு அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம் நடைபெற்று, விசேட பூசையும் அதன் நிறைவில் நண்பகல் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

பிற்பகல் 5.00மணிக்கு வசந்த மண்டப பூசையும், திருவூஞ்சலும் நடைபெற்று 6.00மணிக்கு ஸ்ரீ விநாயகப் பெருமான், ஸ்ரீ சிவகாமி அம்பாள், வள்ளி, தெய்வயானை சமேத ஸ்ரீமுருகப்பெருமான் பூந்தண்டிகையில் தெரு வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும்.

தொடர்ந்து எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.00மணிக்கு பௌர்ணமித் திருவிளக்குப் பூசையும் 6.00மணிக்கு அம்பாள் வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும். (க-9)

## கொழும்பு மாநகர சபைக்கு

# சுயேட்சைக் குழுவின் ஊடாக ஐ.தே.க போட்டி

கொழும்பு மாநாகர சபை, சுயேட்சைக் குழுவினூடாக போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ள சுயேட்சைக் குழுவுடன் ஐ.தே.கட்சி பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு மாநகர சபைக்கான வேட்பு மனு நிராகரிப்பை இரத்துச் செய்யுமாறு கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தமை மற்றும் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக் கல் செய்ய அனுமதி மறுக்கப்பட்டமை ஆகியவற்றையடுத்து ஐக்கிய தேசியக் கட்சி இந் நடவடிக்கையை மேற்கொண் டுள்ளது.

சுயேட்சைக் குழுவினூடாக போட்டியிட்டு கட்சிக்காக வாக்களிக்கவுள்ள மக்களின் வாக்களிப்பு உரிமையினை உறுதி செய்வதற்கே இத்தகைய நடவடிக்கையை எடுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (க)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் நலன்புரி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் 18-40 வயதிற்குட்பட்டவராக இருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருக்க வேண்டும் அல்லது இதற்கு சமனான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

தகுதியானவர்கள் மே மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் நலன்புரி உத்தியோகத்தருக்கான பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு, சுவசிரிபாய 385, பத்தேகம, விமலவன்சதேரோ மாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

★ ★ ★

(கொழும்பு)

விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சில், உதவியாளர் பதவியில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் 18-45 வயதிற்குட்பட்டவராக இருப்பதுடன் முகாமைத்துவம், வியாபார முகாமைத்துவம், பொதுநிர்வாகம் , வர்த்தகம், பொதுநிதி, பொதுநிதி முகாமைத்துவம் ஆகிய துறைகளில் அல்லது அதற்குச் சமனான வேறொரு துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

தகுதியானவர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சு, 561/3, எல்விடிகல மாவத்தை, நாரேஹேன்பிட்டி கொழும்பு-5 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம். (க-9)

# ஸ்ரீராம நவமி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 4.30மணிக்கு ஸ்ரீ ராம நவமி விழா நடைபெறும். அன்றைய தினம் காயத்திரி ஜெபமும், ராம கான பஜனை, சொற்பொழிவு ஆகியனவும் இடம்பெறும். (து)

# சுற்று நிருபம்

(கொழும்பு)

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக மற்றும் அதிபர்கள் தொடர்பாக அதாவது அதிபர்கள் எவ்வாறு செயற்பட வேண்டுமென்ற அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றுநிருபமொன்றை தேசிய பாடசாலைகளுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் பி.எஸ். நோனிஸ் வெளியிட்டுள்ளார்.

நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளில் நீண்டகாலம் பணியற்றும் ஆசிரியர்களை அதிபர்கள் விடுவிக்காது தவிர்த்து வருவதை தமது சுற்றுநிருபத்தில் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (க-9)

# தலைக்கவசம் அணியாததால் 500 ரூபா தண்டம் விதிப்பு

(ஊர்காவற்றுறை)

கடந்த வாரம் மோட்டார் சைக்கிளில் ஊர்காவற்றுறைக்கு சென்ற ஒருவரை ஊர்காவற்றுறை சந்தைக்குள் வைத்து ஊர்காவற்றுறைப் பொலிஸார் மறித்து 500ரூபாய் தண்டப்பணம் அறவிட்டனர்.

தலைக்கவசம் அணியாததற்கே இத் தண்டனை வழங்கப்பட்டது. (க-72)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## 1 பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள்

இதனைச் சாதிப்பதற்கான கொள்கைகளும் செம்மையான நடைமுறைகளும்

**உள்நாட்டில் இடம்பெயர்ந்த பிள்ளைகள்**

**கொள்கை**

*பிள்ளைகள் குடும்பத்தவர்களைப் பிரியாமல் அவர்களோடு சேர்ந்து வெளியேற்றப்படுவதை உறுதி செய்யவும். பிள்ளைகள் குடும்பங்களை விட்டுப் பிரிவதைக் கூடுமானவரை தவிர்க்கவும்.

**செம்மையான நடைமுறைகள்**

1.(அ) பிள்ளைகள் உள்ள குடும்பங்களையும் (ஆ) துணையற்ற பிள்ளைகளையும் இனங்கண்டு அவர்கள் உயிர்



பிழைப்பதற்கும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பான தேவைகளுக்கும் முன்னுரிமை அளிக்கவும்.

2.குழந்தைகள், பாலர் பாடசாலைப் பிள்ளைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் மற்றும் பெண் அல்லது பிள்ளையின் தாபரிப்பில் உள்ள குடும்பங்கள் ஆகியோரை இனங்கண்டு அவர்களின் விசேட தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கவும்.

3.புதிதாக இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குக் 'குடும்ப நிவாரணப் பொட்டல' மொன்றை வழங்க ஏற்பாடு செய்யவும். இதிலே அத்தியாவசியமான இருப்பிடமொன்றை வழங்க ஏற்பாடு செய்யவும். இதிலே அத்தியாவசியமான இருப்பிடப் பொருள், பாய்கள், சமையல் மற்றும் வீட்டுப் பாவனைப் பாத்திரங்கள் ஆகியன அடங்க வேண்டும்.

4.துணையற்ற பிள்ளைகளைப் பாலியல் வன்செயல்கள், நிவாரணம் வழங்குவதில் பாகுபாடு, ஆயுதப் படைகளில் அணிசேர்த்தல் ஆகியவற்றிலிருந்து காப்பதற்கான விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

5.துணையற்ற பிள்ளைகளைப் பாலியல் வன்செயல்கள் நிவாரணம் வழங்குவதில் பாகுபாடு, ஆயுதப் படைகளில் அணிசேர்த்தல் ஆகியவற்றிலிருந்து காப்பதற்கான விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

5. துணையற்ற பிள்ளைகளை அவர்களின் குடும்பத்தவர்களுடன் மறுபடியும் சேர்க்கும் பொருட்டுக் குடும்பங்களைத் தேடும் திட்டங்களை மேற்கொள்ளவும்.

6.துணையற்ற பிள்ளைகளைக் குடும்பப் பின்னணியில் சேர்ப்பதற்கேற்ற பரிகாரமொன்றைக் காணும்வரை அவர்களுக்கு தற்காலிகமான மாற்றுப் பராமரிப்கு ஏற்பாடு செய்யவும்.

7.பிள்ளைகளின் (பிறப்புச் சான்றுப் பத்திரங்கள், அடையாள அட்டை முதலியன) தொலைந்துவிட்ட அடையாளச் சான்றுப் பத்திரங்களை மீட்டுக்கொடுக்க விசேட நடவடிக்கை எடுக்கவும்.

8.பூர்வீக இடத்திலோ புதிய இல்லத்திலோ மீளக் குடியமர்த்தும் போது 'குடும்ப மறுகுடியமர்வுப் பொட்டல' மொன்றை வழங்க ஏற்பாடு செய்யவும். இதிலே வீடும் மலசலகூடமும் அமைப்பதற்கு அல்லது மீளமைப்பதற்கு வேண்டிய உதவி, அத்தியாவசிய வீட்டுப் பாவனைப் பாத்திரங்கள், உணவுற்பத்தி மற்றும் பொருள் தேடும் முயற்சிக்கு வேண்டிய உபகரணங்கள் என்பன அடங்கவேண்டும்.

9.மீளக் குடியமர்த்தும்போது 'சமுதாய மறுகுடியேற்றப் பொட்டல'மொன்றை வழங்க ஏற்பாடு செய்யவும். இதிலே அடிப்படை தளகட்டமைப்புக்கள், போக்குவரத்து தெருக்கள், பாலங்கள், நீர்விநியோக ஏற்பாடுகள் முதலிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

10.சுகாதாரம், போசாக்கு, கல்வி, உளவியற் பாங்கான சமூக சீரமைப்பு ஆகிய பிரிவுகளில் விவரிக்கப்பட்டுள்ள எல்லா நடவடிக்கைகளிலும் உள்ளூரில் இடம்பெயர்ந்த பிள்ளைகளுக்கு முன்னுரிமை அளிக்கவும்.

**சுகாதாரமும் போசாக்கும்**

**கொள்கைகள்:**

*நோய் தடுப்பு, சிகிச்சை ஆகியவற்றில் குறைந்தபட்ச அடிப்படைச் சேவைகளேனும் கிடைப்பதை உறுதி செய்தல். இதிலே பிள்ளைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் ஆகியோர் முன்னுரிமை பெறல் வேண்டும்.

*பிணக்கு நடைபெறும் காலங்களில் வழக்கமான சேவைகளை வழங்குதல் சாத்தியமல்லவென்பதால் மதியூகமான நிலைமைக்குத் தக்கதான பரிகாரங்கள் அவசியம்.

**செம்மையான நடைமுறைகள்**

1.அடிப்படையான நோய் தடுப்பு அமைப்புகள், சேவைகள், சுத்தமான நீர்விநியோகம், கழிவு நீக்குதல் ஆகிய சேவைகளைப் பராமரித்தலும் புதுப்பித்தலும். இதிலே இனவிருத்தி வைத்தியம், பாதுகாப்பான தாய்மை, தாய்ப்பாலூட்டுதலை ஊக்குவித்தல், தடுப்பு மருந்தேற்றுதல் என்பன அடங்க வேண்டும்.

2. அடிப்படையான சிகிச்சைச் சேவைகளைப் பராமரித்தலும் புதுப்பித்தலும். இதிலே பிள்ளைகள், பெண்கள் ஆகியோரின் பிரதான சுகாதாரப் பிரச்சினைகள் முக்கிய கவனம் பெறல் வேண்டும்.

3.காயமுற்ற பிள்ளைகளுக்கு அதிலும் குறிப்பாக மிதிவெடிகளுக்கு இலக்கானவர்களுக்கு சிகிச்சை அளித்துப் புனர்வாழ்வளித்தல்.

4.சுகாதாரம், போசாக்கு ஆகியவற்றின் நிலைமையை அவதானிப்பதுடன் பிணக்கில் பாதிப்புற்ற மக்களின் தேவைகளைக் கணித்தல்.

5.அவசர சேவைகள் ஆற்றும் திறனுள்ள சுகாதார ஊழியர்களைப் பயிற்றுதல். இவர்கள் எதிர்பாராத நிலைமைகளைச் சமாளிக்கத் தக்கவர்களாய் இருத்தல் வேண்டும்.

6.ஆயுதப் பிணக்கு நிகழும் பகுதிகளில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு அடிப்படையான ஆதரவு கிடைப்பதை உறுதி செய்தல்.

7.சுகாதார நிறுவனங்களைச் சேதப்படுத்துவதைத் தவிர்த்து பிணக்கின் பாதக



விளைவுகளிலிருந்து சுகாதார சேவைகளைப் பாதுகாத்தல் வேண்டுமெனச் சகலதரப்பினருக்கும் எடுத்துரைத் தல்.

8.அத்தியாவசிய சுகாதார சேவை கள் பிணக்கில் ஈடுபட்டிருக்கும் சகல தரப்பினருக்கும் கிடைப் பதை அனுமதிக்கும் பொருட்டு 'அமைதி நாள்கள்' 'சமாதான சாலைகள்' ஆகியவற்றை ஊக்குவித்தல்.

9.போதுமான அளவு உணவை, அதிலும் குறிப்பாக பால்மறக்கும் பருவப் பிள்ளைகளுக்கு உகந்த உணவை, உற்பத்தி அல்லது கொள்வனவு செய்ய வகையற்ற குடும்பங்களுக்குக் காலமறிந்து சமத்துவமான முறையில் உணவு நிவாரணம் வழங்குதல்.

10.கமத்தொழில், கடற்றொழில் உள்ளீடுகள் கிடைப்பதை உறுதிப்படுத்துதல். இதிலே உபகரணங்கள், விதைகள், பீடைநாசினி முதலியன அடங்க வேண்டும். (தொடரும்....)



தாளையடி ஆர்.சி.ரி.எம்.எஸ்.மாணவர்கள் மதிய இடைவேளையின் போது....

(படங்கள்: விஷ்ணு, சிவா)

**அன்பார்ந்த மாணவர்களே!**

உங்கள் வலம்புரியில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சறுவர்கள் நாளைய தலைவர்கள' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகு மதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.

**சிறுவர் பாதுகாப்பு இலங்கை**

**யாழ்ப்பாணம்**

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## ரமண மகரிஷி



(1879–1950): 19ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் தோன்றிய சிறந்த ஞானி இவர்.

இவர் இராமநாதபுர மாவட்டத்திலுள்ள திருச்சுழி எனும் ஊரில் 1879 டிசம்பர் 30இல் பிறந்தார். தந்தை சுந்தரம் ஐயர், தாய் அழகம்மாள். இவரது இயற்பெயர் வேங்கடராமன். திருச்சுழி, திண்டுக்கல், மதுரை ஆகிய இடங்களில் இவர் கல்வி பயின்றார். இவர் உயர்நிலைப்பள்ளியில் நான்காம் படிவம் (9ஆம் வகுப்பு) வரை படித்தார். இளமை முதலே இவர் மனதில் திருவண்ணாமலை பற்றிய நினைவு இருந்தது. பெரியபுராணம் படித்ததன் மூலம் இவருடைய உள்ளத்தில் பக்திநெறி வளரலாயிற்று. சிலகாலம் மதுரை சுந்தரேசுவர் கோயிலில் இவர் தியானம் செய்துவந்தார். தம் பதினேழாம் வயதில் ஞானம் பெற்றுத் துறவு மேற்கொண்டு திருவண்ணாலையை அடைந்தார். அனைவரும் இவரைப் பகவான் ரமண மகரிஷி என்றே அழைக்கலாயினர்.

கந்தாசிரமத்தில் இவர் நிலையாகத் தங்கினார். இவருடைய அன்னையும் துறவு பூண்டு இவருடனேயே வசித்து வந்தார். 1922இல் தம் அன்னை காலமானதும் அவருக்கு ஒரு சமாதி அமைத்து அங்கேயே வாழலானார். இந்தச் சமாதியைச் சுற்றிலும் ஒரு பெரிய ஆசிரமம் வளர்ந்தது.

அருணாசலதுதி,பஞ்சகம், உபதேச உந்தியார், உள்ளது நாற்பது முதலிய நூல்களை ரமண மகரிஷி இயற்றியுள்ளார். ஆதி சங்கரரின் விவேக சூடாமணி, ஆத்ம போதம் என்ற நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். நான் யார் எனும் உபதேச நூலில், உயிர்கள் துன்பமின்றி எப்போதும் சுகமாக இருக்கத் தன்னைத்தான் அறிதல் வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார். அதை இவர் தம் வாழ்க்கையில் தாமே வாழ்ந்து காட்டினர். இவர் 1950 ஏப்ரல் 14இல் காலமானார்.

## கண்டுபிடியுங்கள்

அன்புக் குழந்தைகளே!

கீழேயுள்ள இரண்டு படங்களுக்குமிடையே குறைந்தபட்சம் 7 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?





## கோபம் கொள்ளலாகாது

ஓர் ஊரில் சப்தகிரி என்ற ஏழை இருந்தான். அவன் வறுமையால் வாடினான். காட்டிற்குச் சென்று கடவுளை வணங்கி கடும் தவம் செய்தான். கடவுள் அவன்முன் தோன்றி "அன்பனே! உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்றார்.

"கருணை தெய்வமே! நான் பரம ஏழை. எனக்கு செல்வம் வேண்டும்'' என்றான் சப்தகிரி. கடவுள் அவனிடம் சிறு தடியைக் கொடுத்தார். "நான் பொருளைக் கேட்டால் நீங்கள் தடியைத் தருகிறீர்களே'' என்றான் சப்தகிரி.

"அன்பனே! பணம் தந்தால் நீ சுமந்துகொண்டு செல்ல வேண்டும். இந்தத் தடியைத் தட்டினால் ஆயிரம் பொற்காசுகள் உதிரும். உனக்குத் தேவைப்படும் போதெல்லாம் தட்டிக்கொள்'' என்றார் கடவுள்.

"அப்படியா மிக்க மகிழ்ச்சி. ஒருமுறை தட்டிப் பார்த்துக் கொள்ளட்டுமா?''

"அன்பனே! என் சொல்லில் உனக்கு நம்பிக்கை இல்லையா? உனக்கு விருப்பம் இருந்தால் தட்டிப் பார்த்துக்கொள்'' என்றார் கடவுள்.

சப்தகிரி அந்தத் தடியைத் தட்டினான். ஆயிரம் பொற் காசுகள் உதிர்ந்தன. அவனுக்கு பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. ''கடவுளே! இப்படி எத்தனை முறை தட்டினால் பொற்காசுகள் வரும்?''

"அன்பனே! இலட்சம் முறை தட்டினாலும் பொற்காசுகள் வந்துகொண்டே இருக்கும்''.

"ஓ... அப்படியா? தடி கெட்டுப் போகுமா?''

"இது இயந்திரம் இல்லை. எனவே கெடாது. தப்பாது பயன் தரும்'' என்றார் கடவுள்.

''கடவுளே மிக்க மகிழ்ச்சி. தட்டித் தட்டிப் பணத்தைச் சேமித்து வைத்துக்கொள்வேன்''.

"அன்பனே! இது நல்லதல்ல. பணம் அதிகம் இருந்தால் திருடர்கள் வருவார்கள். வேண்டும் பொழுது தட்டிக்கொள்''.

"கடவுளே இத்தடி தவறாது எப்போதும் பணம் தருமா?''

"அன்பனே! தவறாது பணம் தரும். ஆனால் உனக்குக் கோபம் வந்தால் தடி பலிக்காது. உனக்குக் கோபம் வருமா?''

"ஆம்... சுவாமி. எனக்கு அடிக்கடி கோபம் வரும். ஆனால் இனி கோபம் வராமல் பார்த்துக் கொள்வேன்''.

கடவுள் மறைந்துவிட்டார். சப்தகிரி பொற்காசுகளையும் தடியையும் எடுத்துக்கொண்டு தன் ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

'மனமே கோபம் வரக்கூடாது. கோபம் வந்தால் தடி பலிக்காது' என்று உருப்போட்டுக் கொண்டே போனான். வழியில் ஒரு சந்நியாசி தென்பட்டார். அவர் சப்தகிரியைப் பார்த்து

"ஐயா எங்கே போய் வருகின்றீர்?'' என்று கேட்டார். அதற்கு சப்தகிரி,

''சுவாமி, நான் கடவுளை வேண்டித் தவம் செய்து பொற்காசுகள் தருகின்ற தடியைப் பெற்று வருகிறேன்'' என்றான்.

"ஆச்சரியமாக இருக்கிறதே. தடி பணம் தருமா? எங்கே காட்டு பார்ப்போம்?'' என்று சந்நியாசி கேட்டார்.

''சுவாமி இதோ பாருங்கள் தட்டுகிறேன். காசு உதிரும். நீங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒரு காசுகூடத் தரமாட்டேன்'' என்று கூறி தடியைத் தட்டினான். உடனே ஓராயிரம் பொற்காசுகள் உதிர்ந்தன. அவற்றை எடுத்து மூட்டை கட்டிக்கொண்டான் சப்தகிரி.

"இத்தடி எப்போதும் பொற்காசுகளைத் தருமா?'' என்று கேட்டார் சந்நியாசி. "ஆம், எப்போதும் தரும். எனக்குக் கோபம் வந்தால் தடி பலிக்காது''.

"உனக்குக் கோபம் வருமா?''

''ஆம், அடிக்கடி வரும். ஆனால் இனி வராது''.

"அப்படியா? இனி உனக்குக் கோபம் வராதா?''

"இனி வராது. எப்போதும் வராது''.

''நிச்சயமாக வராதே?''

''நிச்சயமாக வராது''.


''உறுதியாக வராதா?''

''உறுதியாக வராது''.

"கோபம் ஒருநாளும் வராதா?''

''கோபமே வராது என்று கூறுகிறேன். மறுபடியும் மறுபடியும் வராதா? வராதா? என்று கேட்கின்றாய். உனக்குப் புத்தியில்லையா? முடனே!'' என்று சத்தம் போட்டுக் கோபத்துடன் சந்நியாசியைப் பார்த்து திட்டினான் சப்தகிரி.

சந்நியாசியாக வந்த கடவுள் மறைந்துவிட்டார். தடியும் தன் மகிமையை இழந்தது. சப்தகிரி தன் அறியாமையை எண்ணி வருந்தினான்.



## நவதானியங்கள்



நவதானியங்கள் எவை தெரியுமா?

1.நெல் 2.உளுந்து 3.பயறு
4.கடலை 5.மொச்சை 6.எள்
7.சாமை 8.தினை 9.துவரை.

## உங்களுக்குத் தெரியுமா?

*பறவைகளிலேயே மிக நீளமான நாக்கு உள்ள பறவை மரங்கொத்தி.

*ஓணானின் நாக்கு அதன் உடலை விட நீளமாக இருக்கும்.

*நாய் தனது நீளமான நாக்கைக் கொண்டே தன் உடல் முழுவதையும் எப்போதும் தூய்மையாக வைத்துக்கொள்ளும்.

*ஒட்டகச்சிவிங்கியின் நாக்கு 21 அங்குலம். அது தன்னுடைய நாக்கைக் கொண்டே தன் காதுகளைச் சுத்தம் செய்யும்.

*வாத்து தூங்கிய–வாறே நீரில் நீந்தும்.

## விடைகள்

### கண்டுபிடியுங்கள்

1.நீர்த்தொட்டி 2.ரவர்
3.வீடு 4.மின்கம்பம்
5.குடை 6.தோள் பை
7.தண்ணீர் போத்தல்

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

## INTERNATIONAL CRICKET COUNCIL

23

## ஒவர் ஒன்றில்.... இப்படியா?

ஒரு நாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியைப் பொறுத்தவரை அதிக ஓட்டங்களைக் குவிப்பதே பிரதான இலக்காகும்.

அதிலும் ஒரு ஓவரில் அதிக ஒட்டங்களைக் குவிப்பது வீரர்களின் திறமையாகும். அந்தவகையில் ஒரு ஓவரில் சிக்ஸர்கள், பவுண்டரிகள் அடங்கலாக கூடிய ஓட்டங்களைப் பெற்றவர்களைத் தற்போது நோக்குவோம்.

இதில் முதல் இரு இடங்களில் இருப்பவர் இலங்கையணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும், அதிரடி ஆட்டக்காரருமான சனத் ஜெயசூர்யா.

பாகிஸ்தான் அணிக்கெதிராக 1995-96 காலப்பகுதியில் சிங்கப்பூரில் நடைபெற்ற போட்டியில் பாக் அணியின் பந்து வீச்சாளர் அமீர் சொஹைல் வீசியபந்தை எதிர் கொண்ட ஜெயசூர்யா நான்கு 6 ஓட்டங்கள், மற்றும் நான்கு ஓட்டம் அடங்கலாக (30X 406666l) ஓட்டங்களைப் பெற்றார். இதே வேளை சொஹைல் தனது முதலாவது பந்து அகலப்பந்தாக வீசியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நியூஸிலாந்து அணியின் கிறிஸ் ஹறிஸ்ஸின் பந்தினை எதிர் கொண்ட இவர் நான்கு 6 ஓட்டங்கள், (666642) அடங்கலாக 30 ஓட்டங்களைப் பெற்றார். இதேவேளை நியூஸிலாந்து அணியின் ட்றப்பின் பந்தினை எதிர்கொண்ட டெண்டுல்கர், ஜடேஜா ஆகியோர் 28ஓட்டங்களைக் குவித்தனர்.

இதில்டெண்டுல்கர்நான்கு 4 ஓட்டங்களையும் ஒரு 6 ஓட்டத்தையும் பெற்றார். அத்துடன் இவ் ஓவரில் முறைதவறிய (NO BALL) பந்தொன்றை வீசிய ட்றம், ஒரு உதிரி ஓட்டத்தையும் விட்டுக்கொடுத் தார்.

மேலதிக விபரங்களுக்கு அட்டவனையைப் (ஓவர் ஒன்றில்.... ஓட்டங்கள்) பார்க்கவும்.

## இளமைத் துடிப்பில்...

கிரக்கெற் வரலாற்றில் இளம் வயதில் களம் புகுந்து இளம் வயதிலே பல சாதனைகளைப் பலர் புரிந்துள்ளனர். அந்த வகையில் இளம் வயதில் தமது முதல் சதம் அடித்தவர்களை தற்போது நோக்குவோம். இவ்வரிசையில் முதல் 6 இடங்களில் இருப்பவர்கள் பாகிஸ்தான் வீரர்களாவங். இதில் முதலிடத்தில் இருப்பவர் பாகிஸ்தான் அணியின் அதிரடி மற்றும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சஹிட் அப்பிரிடி இவர் 1996/97 காலப் பகுதியில் இலங்கை அணிக்கு எதிராக நைரோபியில் நடைபெற்ற போட்டியில் தனது 16ஆவது (217 நாட்கள்) வயதில் 102 ஓட்டங்களைப் பெற்று இச்சாதனையைப் படைத்தார்.

அவ்வரிசையில் இரண்டாம் இடத்தில் இருப்பவர் இம்ரான் நஸீர். இவர் சிம்பாவே அணிக்கெதிராக 1999/2000 காலப் பகுதியில் சென்ட் ஜோர்ஜ்ஜில் நடைபெற்ற போட்டியில் தனது 18ஆவது (121 நாட்கள்) வயதிலே தனது முதல் சதத்தினைப் பெற்றார். இவர் ஆட்டமிழக்காமல் 105ஓட்டங்களை இப் போட்டியில் பெற்றார்.

மூன்றாம் இடத்தில் இருப்பவர் இதே அணியினைச் சேர்ந்த சலீம் இலாகி இலங்கை யணிக்கெதிராக 1995/96 காலப்பகுதியில் தனது 18 (312 நாட்கள்) ஆவது வயதில் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களை பெற்று இப்பட்டியலில் இடம் பிடித்தார்.

நான்காவது இடத்தில் 20(19நாட்கள்) வயதில் தனது முதல் சதத்தினைப் (111*) பூர்த்தி செய்த பாக் அணியின் தற்போதைய சகலதுறை ஆட்டக்காரரான சொய்ப் மாலிக்கும், ஐந்தாம் இடத்தில் இந்தியாவுக்கு எதிராக தனது 20 (37 நாட்கள்) வயதில் சதத்தினைப் (108*) பெற்ற தற்போதைய பாக் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சல்மான் பட்டுப், 6ஆவது இடத்தில் பங்களாதேஷ் அணிக்கெதிராக 1988/89 ஆண்டு காலப்பகுதியில் தனது 20(39 நாட்கள் வயதில் தனது முதல் சதத்தினைப் (124*) பெற்ற இர்ஷா அளுமட்டும் அடுத்தடுத்துள்ளனர்.

இவர்களுக்கு அடுத்தபடியாக பங்களாதேஷ் அணியின் மெச்றாப் கொசெய்யின் (20-184 நாட்கள்) இலங்கையணியின் தற்போதைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் உபுள் தரங்க (20-212 நாட்கள்) மேற்கிந்திய அணியின் பவல் 20-266 நரீட்கள்), பாக் அணி யின் பைஷல் இக்பால் (20-335 நாட் கள்) பங்களாதேஷ் அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரரான முஹமட் அஷ்ரபுள் (20-346) நாட்கள் ஆகியோர் அடுத்தடுத்துள்ளனர்.

தனது 16ஆவது வயதில் இதே வேளை இந்திய அணியில் நுழைந்த சச்சின் டெண்டுல்கர் (21 -138 நாட்கள்) ஆவது வயதில் முதல் சதத்தினைப் பெற்று 20 ஆவது இடத்தில் உள்ளார்.

## வயது என்ன? வயது

வயது அதிகரித்துச்சென்றாலும் தமது திறமையான துடுப்பாட்டம் மூலம் அணியில் இடம்பிடித்து சாதனை படைத்தவர்கள் பலர் உள்ளனர். அவ்வரிசையில் கூடிய வயதில் விளையாடி சதத்தினைப் பெற்றவர்களைப் பார்க்கையில் முதல் இடத்தில் இருப்பவர் இங்கிலாந்து அணியின் போய்கொட்.

இவர் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக 1979/80 காலப்பகுதியில் சிட்னியில் நடைபெற்ற போட்டியில் தனது (39-51 நாட்கள்) ஆவது வயதில் 105 ஓட்டங்களைப் பெற்றார். இவர் இப் போட்டிக்குப் பின்னர் 15 போட்டிகளில் விளையாடினார். ஆன்ால் சதம் எதனையும் பெற முடியவில்லை.

இவருக்கு அடுத்தபடியாக இந்திய அணியின் சுனில் கவாஸ்கர் இவர் நியூஸிலாந்து அணிக்கு எதிராக 1987/88 காலப்பகுதியில் நாக்பூரில் இடம்பெற்ற போட்டியில் தனது (38-113) நாட்கள் வயதில் விளையாடி ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களைப் பெற்றார்.

மேற்கிந்திய அணியின் டி.கெய்ன்ஸ் இங்கிலாந்து அணிக்கு எதிராக போர்ட் ஒவ்ஸ்பெயினில் நடைபெற்ற போட்டியில் தனது 38 (18நாட்கள்) வயதில் சதத்தினை (115)ப் பெற்றதன் மூலம் இவ் வரிசையில் மூன்றாம் இடம் பிடித்தார்.

### நேரயல்

இவர்களுக்கு அடுத்தபடியாக 1 சி.கிறினீட்ஜ் (மேற்இந்) -37-321 நாட்கள் -117

மொகிந்தர் அமர்நாத் (இந்) -37-185 நாட்கள் -102*

அலெக்ஸ் ஸ்ரூவேர்ட் (இங்) -31-103 நாட்கள் -100*

வி.கொங்டென்(நியூ) -37-26நாட்கள் -101

ஜி.கொக் (இங்) - 36-306 நாட்கள்-112 *

சனத் ஜெயசூர்யா (இல) -36-206 நாட்கள் - 114

லம்போர்ட் (மேற்இந்) 36-57 நாட்கள் 119


## ஓவர் ஒன்றில்..... ஓட்டங்கள்

| துடுப்பாட்ட வீரர் | ஓட்டம் | பந்து வீச்சாளர் | அணி... எதிர் | இடம் | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| சனத் ஜெயசூர்யா (X406661) | 30 | அமீர் சொஹைல் | இல VS பாக் | சிங்கப்பூர் | 1995-96 |
| சனத் ஜெயசூர்யா (666642) | 30 | கிறிஸ் ஹறிஸ் | இல VS நியூ | சார்ஜா | 2000-01 |
| சஹீட் அப்ரிடி (662644) | 28 | சனத் ஜெயசூர்யா | பாக் VS இல | நைரோபி | 1996-97 |
| சச்சின் டெண்டுல்கர் (4 B26444<br>அஜெய் ஜடேஜா (L) | 28 | சி.ட்றம் | இந் VS நியூ | ஹதராபார்த் | 1999-2000 |
| சஹிட் அப்ரிடி (666064) | 28 | இனாமுல் ஹக் | பாக் VS இல | டாஹா | 2001-02 |
| டி.லீமன் (444646) | 28 | ஆர்.வான்வுறோன் | அவுஸ் VS நமீபியா | போட்சீப்ஸ்றோம் | 2002-03 |
| றிக்கி பொன்டிங் (N4N14<br>அன்று சைமன்ஸ் (N4N621)<br>பிரெட்லி (1) | 28 | ரெலிமாஜஸ் | அவுஸ VS தென்ஆபி | ஜொனெஸ் போர்க் | 2005-06 |
| அஸீப் முஜ்ராவா (41)<br>சலீம் மலிக் (6466) | 27 | முத்தையா முரளிதரன் | பாக் VS இல | கொழும்பு | 1994-95 |
| றமீஷ் ராஜா (41)<br>மொய்ன் கான் (6466) | 27 | ஐ.பிசொப் | பாக் VS மேற் இந் | சார்ஜா | 1995-96 |
| மார்வன் அத்தப்பத்து (1)<br>சனத் ஜெயசூர்யா (66446) | 27 | அக்ரம்கான் | இல VS பங் | கொழும்பு | 1997-98 |
| சஹீர் கான் (1666X6)<br>அஜித் அகர்கர் (1) | 27 | ஹென்றி ஒலங்கா | இந் VS சிம் | ஜோர்ஜ்பூர் | 2000-01 |
| இம்ரான் நஸீர் (1)<br>சஹிட் அப்ரிடி (64646) | 27 | ஜி.பிரட்போர்ண் | பாக் VS நியூ | சார்ஜா | 2000-01 |

## ஒவ்வொரு அணிக்கெதிராகவும்..... சதம்

| | சதம் | போ. | அவுஸ் | இங் | தென் ஆபி | மேற் இந் | நியூ | இந் | பாக் | இல | சிம் | பங் | ஏனையவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சச்சின் டெண்டுல்கர் (இந்) | 39 | 362 | 7 | 1 | 3 | 2 | 4 | - | 5 | 7 | 5 | 0 | 5 |
| சௌரவ் கங்குலி (இந்) | 22 | 279 | 1 | 1 | 3 | 0 | 3 | - | 2 | 4 | 3 | 1 | 4 |
| சயீட் அன்பர் (பாக்) | 20 | 247 | 1 | 0 | 0 | 2 | 4 | 4 | - | 7 | 2 | 0 | 0 |
| றிக்கி பொண்டிங் (அவுஸ்) | 20 | 250 | - | 3 | 2 | 1 | 2 | 4 | 1 | 4 | 1 | 1 | 1 |
| பிறைன் லாரா (மேற்இந்) | 19 | 259 | 3 | 1 | 3 | - | 2 | 0 | 5 | 2 | 1 | 1 | 1 |
| சனத் ஜெயசூர்யா (இல) | 19 | 357 | 2 | 2 | 0 | 0 | 4 | 5 | 3 | - | 1 | 2 | 0 |
| மார்க் வோவ் (அவுஸ்) | 18 | 244 | - | 1 | 2 | 3 | 3 | 3 | 1 | 1 | 3 | 0 | 1 |
| டி.கெய்ன்ஸ் (மேற்இந்) | 17 | 238 | 6 | 2 | 0 | - | 2 | 2 | 4 | 1 | 0 | - | - |
| ஹேர்ஸல்கிப்ஸ்(தென்ஆபி) | 16 | 185 | 2 | 2 | - | 4 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 |
| நதேன் அஷ்ரில் (நியூ) | 16 | 212 | 1 | 2 | 1 | 1 | - | 5 | 2 | 0 | 3 | 0 | 1 |
| அடம்ஸ்கில்கிறிஸ்ட்(அவுஸ்) | 14 | 239 | - | 2 | 2 | 0 | 2 | 1 | 1 | 4 | 1 | 0 | 1 |
| கெரி கிஸ்டன் (தென் ஆபி) | 13 | 185 | 2 | 1 | - | 0 | 2 | 4 | 2 | 0 | 0 | 0 | 2 |
| ஜக்கலிஸ் (தென் ஆபி) | 13 | 231 | 1 | 1 | - | 3 | 3 | 0 | 1 | 3 | 1 | 0 | 0 |
| கிறிஸ் கெய்ல் (மேற்இந்) | 11 | 128 | 0 | 1 | 2 | - | 0 | 3 | 1 | 0 | 2 | 0 | 2 |

## இலங்கைக்கு பின்னடைவா...?



இலங்கை கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவரும் அதிரடி ஆட்டக் காரருமான சனத் ஜெய சூரியா ரெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

இவ்வாரம் பாகிஸ்தான் அணிக்கெதிராக கண்டியில் நடைபெறும் போட்டிக் குப்பிறகு ஓய்வுபெறும் அவர் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலக கிண்ணப் போட்டிகள் வரை தொடர்ந்து ஒரு நாள்போட்டிகளில் விளையாட வுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை

### தந்தையின் மறைவு! 6



இந்தக் கல்லூரியின் முதல்வர் மேலாளர் எல்லாமாக இருந்தவர் டாக்டர் ஆர்தர் வெல்லிங்டன். இவர் மாணவர்கள் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் நான் யார் தெரியுமா? பிரெஞ்சு நாட்டு நெப்போலியனைத் தோற்கடித்த வெல்லிங் டன் பிரபுவின் வழிவழி வந்தவன் என்று தம்பட்ட மடிப்பது வழக்கமாம். இதே கல்லூரியில் ரெவண்டு மோகிடிமி என்பவர் இருந்தார். இவர்தான் விடுதிக்காப்பாளர் சோதோ இனப்பிரிவைச் சேர்ந்தவர் இவர் முதல்வர் வெல்லிங்டனுடன் சமமாகத்தான் நடந்து கொள்வார் வளைந்து குனிந்து வணங்கமாட்டார்.

ஒரு நாள் இரு ஆசிரியர்களுக்கு இடையில் நடைபாதையில் சர்ச்சை எழுந்துவிட்டது. அதை மோகிடிமி விசாரித்துக்கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அங்கு வந்து சேர்ந்த டாக்டர் வெல்லிங்டன் இங்கே என்ன நடக்கிறது? எனக்கு உடனே தெரிய வேண்டும் எனக் கோபக் குரலில் பேசினார். அவரது தொனியைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் நான் விசாரித்துக்கொண்டிருக்கிறேன் நாளைக்கு எல்லா விபரங்களையும் வந்து சொல்வேன். நீங்கள் போகலாம் என சிறிதும் சலனமில்லாமல் சொன்னார் ஒரு வெள்ளை அதிகாரிக்குப் பணியாமல் சம நிலையில் நின்று அவர் பேசியது மாணவர்களிடையே பணியாமல் சம நிலையில் நின்று அவர் பேசியது மாணவர்களிடையே ஒரு புதுவித உணர்வை ஏற்படுத்தவே செய்தது. இவரை முன்மாதிரியாகக் கொண்டார் மண்டேலா சரி எனக் கூறிவிட்டுப் போய் விட்டார் வெல்லிங்டன்.

மாணவர்களுக்கு பல பொறுப்புக்கள் தரப்படும் நியமிக்கப்படுபவர் மற்ற மாணவர்களைக் கவனிக்க வேண்டும் பல்வேறு பொறுப்புக்களைப் பார்த்த பின்னர் இரவில் விழித்திருந்து விடுதி மாணவர்களின் ஒழுக்கத்தைக் கண்காணிக்கிற பொறுப்புக்கு மண்டேலா நியமிக்கப்பட்டார். விடுதியறைகளையொட்டி கழிவறை இல்லை சில மீட்டார் தூரம் சென்று தோட்டத்திற்குள் இருந்த ஒரு ஒதுக்குக் கட்டத்தில் கழிவறை இருந்தது. மழை காலத்தில் ஈர மண்ணில் புல்லுக்கிடையே நடக்கக் கூசி மாணவர்கள் வராந்தாவில் நின்றபடி பூச்செடிகளில் சிறிநீர் கழித்து விடுவது வழக்கம். இது விதிகளை மீறிய செயல் ஒரே நாள் இரவில் பத்துப் பதினைந்து மாணவர்களின் பெயரைப் பட்டியலில் எழுதி விட்டார் மண்டேலா. அதிகாலையில் ஒருவர் இதே காரியம் செய்து பிடிபட்டார். அவரைப் பிடித்து பார்த்த போது அவரும் மண்டேலா மாதிரி ஒழுக்கத்தைக் கவனிக்க நியமிக்கப்பட்ட ஒருவராக இருந்தார். இவரையும் பிடித்துக் கொடுப்பதா? திகைத்துப் போனார் மண்டேலா. விதிகளை அமுல்படுத்துவோர் விதிகளை மீறாமல் இருக்கவேண்டும்... சிறிது நேரச் சிந்தனைக்குப் பின் குற்றவாளிப்பட்டியல் சீட்டைக் கிழித்துக் கீழே போட்டுவிட்டார் மண்டேலா. வேலியே பயிரை மேய்ந்தால்... என நினைத்துக் கொண்டாராம்.

ஹீல்டன் கல்லூரியில் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சி நடந்தது. வருட இறுதிக் கட்டத்தில் ஒரு நாள் புகழ்மிக்க கவிஞர் முக்கோயிவருவதாகவும் அவர் பேசப் போவதாகவும் அதற்காக விடுமுறை விடப்படுகிறது என்றும். முதல்வர் அறிவித்திருந்தார். மன்றத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் திரளாகக் கூடி விட்டனர்.

டாக்டர் வெல்லிங்டன் அறையிலிருந்து ஒரு கருப்பு மனிதர் புலித்தோல் போர்த்த உடையில் இரு கைகளிலும் குத்தீட்டியோடு வெளியில் வந்தார். அந்த வாயில் வழியாக வெல்லிங்டனைத் தவிர வேறு யாரும் வந்தது இல்லை முதல் தடவையாக ஒரு ஆப்பிரிக்கக் கவிஞன் நடந்து வந்ததே பெரும் வியப்பைத் தந்தது. அவரைத் தொடர்ந்து வெல்லிங்டன் வந்தார்.



விளையாட்டுத்துறையில் ஆர்வம் காட்டி ய மண்டேலா

முக்கோயி மிகச் சாதாரணமாகத் தோன்றினார். பேச்சும் மெதுவாகத் தொடங்கியது. எந்த வகையிலும் மாணவர்களின் உணர்ச்சியைத் தூண்டுகிறவராக அவர் காணப்படவில்லை கவரவும் இல்லை. பேசும் போது குத்தீட்டியை மேலும் கீழுமாக ஆட்டிக்கொண்டு பேசினார். அவரது கத்தி மேலே தொங்கிய கம்பியில் அடித்தது. இது நடந்தவுடன் இது போலத் தான் ஆப்பிரிக்கக் கலாச்சாரம் ஐரோப்பியக் கலாச்சாரத்தோடு மோதிக் கொண்டிருக்கிறது. ஐரோப்பியர்கள் திறமையோடு பொருள்களை கருவிகளைச் செய்வது உண்மை ஆனால் அவற் றிற்கு உயிரும் ஆத்மாவும் கிடையாது. ஆனால் நம்முடையது மனித நேயம் கொண்டது. என முழங்கினார்.

பின்னர் விண்வெளி நட்சத்திரங்களுடன் ஒவ்வொரு கண்டத்தையும் நாட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் அவரது கவிதையைப் பாடினார். திரளாகக் காணப்படும் மில்கிவே என்ற நட்சத்திரத்தை ஐரோப்பாவுக்கு ஒப்பிட்டு அவர்கள் பேராசைக்காரர்கள் . எனவே நிறைய நட்சத்திரங்களைக் கொடுத்து விட்டேன். என்றவர் ஆப்பிரிக்க மக்களே சோசா இனமே நீ தான் விடி வெள்ளி! எழுக!! எனப் பலத்த கைதட்டலுக்கிடையே முடித்தாராம் இதைக் குறிப்பிடும் மண்டேலா சோசா எனப் புகழ்ந்த போது. சோசா இனத்தவன் என்ற வகையில் நானும் பெருமிதமடைந்தேன் ஆனால் , ஆப்பிரிக்கா எனத் தொடங்கி சோசா என ஒரு சிறு வட்டத்திற்குள் வந்து முடிந்தது குழப்பத்தைத்தான் கொடுத்தது. என்கிறார்... இங்கு வெற்றிகரமாகப் படித்துத் தேறினார் மண்டேலா. ஆனால் ரீஜண்டின் மூத்த மகன் ஜஸ்டிஸ் விளையாட்டில் காட்டிய ஆர்வத்தைப் படிப்பில் காட்டாததால் தேறாமல் மீண்டும் தொடர்ந்து படிக்க ஹீல்டனில் தங்கி விட்டார் மண்டேலா ஹாரே கோட்டைக்குச் சென்றார்.

(தொடரும்)



## தவக்கால சிந்தனை

சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும்; நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்

இறைவனின் இதயம் அன்பின் ஊற்று, கருணையின் பிறப்பிடம், அன்பிற்கு இலக்கணம்! பாவத்தால் பழுதடைந்த மனித இனத்தை தன் பாசக் கயிற்றால் கட்டி அன்பு என்னும் கூண்டினுள் அடைக்கலம் கொடுக்கும் அந்த ஆண்டவனின் கருணையோ கருணை. இது அவரது செயல்களில் வெளிப்படுகிறதே. பாவிகளை சிறிதும் தயங்காது மன்னித்து, அவரது கருணை மழையில் திளைக்கச் செய்கிறார். இன்றைய நற்செய்தி வாசகத்தில் வரும் விபச்சாரப் பெண்ணின் செயலை அவர் பாராட்டவில்லை. மாறாக, “இனிமேல் பாவம் செய்யாதே போ” என்று அன்போடு மன்னித்தார். பாவிகளாக இருந்த போதிலும் நாம் ஒவ்வொருவரும் இறைவனின் மகனாக/மகளாக வாழும் தகுதியுடையவர்கள் என்ற பேறு கொடுக்கப்படுவதை உணர இந்த நற்செய்தி வாசகம் போதுமே. பாவத்திற்கு மன்னிப்பு பெற இத்தவக்காலத்திலாவது இறைவனைத் தேடிச் செல்கிறோமா? முடிவில்லா அன்பினால் இறைவனில் வேரூன்றி வைக்கப்பட்ட நமது ஆன்மா, அழியாமல் இருக்க ஆண்டவன் எழுப்பும் ஆதங்கக் குரலே மன்னிப்பு என்பதை உணருகிறோமா?

காவலன்

## தேர்தல் முடிவு அமைதிக்கான தீர்ப்பு என்கிறார் நிமால் சிறிபால டி சில்வா!

(கொழும்பு)

அமைதி முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்காக மக்கள் அளித்துள்ள தீர்ப்புதான் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் என்று இலங்கையின் பேச்சுக்குழுத் தலைவரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். தேர்தல் முடிவுகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையி லேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவதற்காக மக்கள் அங்கீகரித்து அளித்திருக்கும் தீர்ப்பு இது. அந்த அளவுக்கு மஹிந்த ராஜபக்ஷ மீதும் அரசாங்கத்தின் மீதும் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றனர் என்றார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுகையில் பெரிய அளவிலான தேர்தல் ஒன்று நடைபெற்ற பின்னர் அரசாங்கத்தில் எந்த கட்சி இருக்கிறதோ அதை மக்கள் ஆதரிப்பது வழமை. ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர்கள் பலரும் இந்தத் தேர்தலில் ஆர்வம் காட்டவில்லை என்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதித் தலைவர் பியசேன கமகே கூறியதாவது, மஹிந்த சிந்தனைக்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்கள் அனைவருமே ஆதரவளித்தனர். தற்போது தெரிவாகி இருக்கும் அனைத்து கூட்டமைப்புப் பிரதிநிதிகளும் கிராமங்களின் அபிவிருத்தி பணிக்காக பாடு படுவர் . அதன் மூலமாக மஹிந்தவின் செயற்திட்டதை நிறைவேற்றி புதிய இலங்கையை கட்டி எழுப்புவோம்.


இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிர்வரும் தேர்தல்களுக்கு முகம் கொடுக்க கட்சி மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

ஜே.வி.பி.பியின் பொதுச்செயலாளர் ரில் வின்சில்வா இது பற்றிக் கருத்து தெரிவிக்கையில், எமது கட்சிக்கான வாக்குகள் கடந்த முறையை விட 10 விழுக்காடு அதி கரித்துள்ளது. மகரகம சூரியவெள உள்ளிட்ட பல அமைப்புக்களில் ஜே. வி.பி. பிரதான எதிர்கட்சியாக வளர்ந்துள்ளது என்றார்.

ஜாதிகஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் இது பற்றிக் கருத்து தெரிவிக்கையில், எமது கட்சிக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்றாலும் எமது தத்துவப் பரப்புரைகள் தொடரும். எமது தத்துவங்களை ஏற்று எமக்கு மக்கள் வாக்களித்தமைக்காக மகிழ்ச்சியடை கிறோம் என்றார். இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பேச்சாளர் ஆர் .யோகராஜன் தெரிவிக்கையில், ஜனாதிபதி த் தேர்தலின் போது வெற்றி பெறாத பல இடங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றியடைந்துள்ளமை திருப்தியளிக்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடனான ஒப்பந்தப்படி மாத்தளை மாநகர சபை ஹட்டன்- டிக்கோயா நகர சபைகள் கொத்மலை அம்பேகமுவ பிரதேச சபைகளில் நிர்வாகங்களை முன்னெடுக்கும் பணிகளை கட்சி மேற்கொண்டு வருகிறது என்றார்.

(கு)




திண்மக்கழிவகற்றல் தொடர்பான கருத்தரங்கு யாழ். மாநகர ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் நேற்று முன்தினம் யாழ். நூலக கேட்போர் கூடத்தில்இடம் பெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்ட சுகாதார வைத்திய அதிகாரி எம்.மரியதாசன் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரி ரி. என். சூரிய ராஜ் பொறியியலாளர் ஈ.சுரேஸ் குமார் மற்றும் சுகாதாரப் பிரிவினர் பொறுப்பதிகாரிகள் ஆகியோரை படங்களில் காணலாம். (க.133)

## 136 வது மைல்கல்




இந்து சமுத்திரம் சூழ்ந்த யாழ்ப்பாணக் களப்புக்கு அண்மையில் அமைந்துள்ளது சாவகச்சேரி

இப்பிரதேசம், இப்போது மக்கள் தொகை செறிந்த செழிப்பான பகுதியாகியுள்ளது. மேலும், நெல், மா, வெங்காயம் போன்ற பயிர்களால் தன்னிறைவும் கண்டுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் பெற்ற சாவகச்சேரி விரைவாக விருத்தி பெறுகிறது. இந்நகரின் பொருளாதார அபிவிருத்திக்கு வலுவான தொடர்பாளராக, இப்பிரதேச மக்களின் பணத் தேவைகளை நிறைவேற்ற, கொமர்ஷல் வங்கியின் புதிய கிளை வருகிறது.

இலக்கம் 7, கண்டி வீதி, சாவகச்சேரியில், அமைந்துள்ள கொமர்ஷல் வங்கியின் இந்தப் புதிய கிளை, 2006 ஏப்ரல் 03 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10.20 க்கு சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது. இதில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

தொலைபேசி (முகாமையாளர்) 021-2229675 (பொது) 021-2229676-7 (தொலைநகல்) 021-2229678

**கொமர்ஷல் வங்கி**
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

Ogilvy Outreach

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழியவிடல்

-குறள்

வலம்புரி

## சட்டங்களை அமுல்படுத்த அரச அமைப்புகள் துணிய வேண்டும்

சட்டம் என்பது மக்களை ஒழுங்குபடுத்தும் கருவி. அதனை சரியான முறையில் அமுல்படுத்துகின்றபோது நாட்டில் கொலை , கொள்ளை , களவு போன்ற தீய செயல்களுக்கு இடம் இல்லாமல் போகும்.

எனினும், சட்டங்களை அமுல்படுத்தவேண்டியவர்கள் பாராமுகமாகவிருந்தால் நிலைமை படுமோசமாகவேயிருக்கும். இது விடயத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் முதல் உயர் நீதிமன்றங்கள் வரை தமது கடமைகளைச் செய்வதில் அதி தீவிரம் காட்ட வேண்டும்.

அவ்வகையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயங்கும் உள்ளூராட்சி மன்றங்கள் தமது கடமைகளை - தத்தம் பிரதேசத்தில் அமைக்கப்பட வேண்டிய அடிப்படைச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பின்நிற்பதைக் காண முடிகின்றது.

குறிப்பாக, யாழ்.குடாநாட்டில் வீதிகளில் திரிகின்ற கட்டாக்காலி ஆடு, மாடு மற்றும் நாய்களின் நடமாட்டம் நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றது. இதனால் ஏற்படும் விபத்துக்கள் மனித உயிர்களைக் காவு கொள்கின்றன.

கால்நடைகளை வளர்ப்பது தவறன்று. ஆனால் அவற்றைக் கட்டி வளர்க்க வேண்டும் என்று உள்ளூராட்சி மன்றங்கள் கூறும் சட்டமாகும். அவ்வாறாயின், யாழ்.குடாநாட் டில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்து வருவதற்கான காரணம் தான் என்ன?

உள்ளூராட்சி சபைகள் இயங்குகின்றன. அவை அறவிடப்படவேண்டிய வரிகளை அறவிடுகின்றன. அங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்கள் சம்பளம் பெறுகின்றனர். இவ்வா று உள்ளூராட்சி சபைகள் தங்கு தடையின்றி இயங்கும்போது கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்துவதில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின், எங்கோ , ஏதோ தவறு நடைபெறுகின்றது என்பது புலனாகின்றது அல்லவா?

கால்நடைகளை கட்டி வளர்க்க வேண்டும் என்ற சட்டம் பொதுமக்களின் காதுகளில் உரத்துக் கூறப்படுவதும் அதனை அவர்கள் நடைமுறைப்படுத்தத் தவறும் பட்சத்தில் கிடைக்கக் கூடிய தண்டனைகளை தெளிவுபடுத்துவதும் உள்ளூராட்சி மன்றங்களின் தலையாய கடமையாகும்.

இதனை முதலில் அமுல் செய்யும்போது சட்டத்தை மதிக்கும் மக்கள் அதற்குக் கட்டுப்படுவர். அதன் பின்னர் இருக்கக்கூடிய தவறுகளுக்குத் தண்டனையே வழியாகும்.

தண்டனைகளை விதிக்கும்போது இருக்கக் கூடிய மிகப் பெரிய விடயம் பக்கச் சார்பற்ற தீர்ப்பாகும். அதாவது செல்வாக்கு என்பதற்கு எவ்விடத்திலும் இடம் இல்லாது போகின்றபோது சட்டத்தை அமுல்படுத்துவதும் அதனைப் பின்பற்றச் செய்வது சுலபமாகிவிடும்.

யுத்தத்தால் பாதிப்படைந்த யாழ்.குடாநாடு யுத்தத்தால் மட்டும் அழிந்து போகவில்லை. மாறாக சட்டங்கள் , சம்பிரதாயங்கள் என்பவற்றை மதிக்கும் மன நிலையும் மாறி இன்று மிகப் பெரும் சீரழிவை நாம் சந்தித்து வருகின்றோம்.

சட்டங்களை மதிப்பதில் தவறுகள் ஏற்படுகின்றபோது குழப்பங்கள், ஆபத்துக்களும் நடக்கின்றன. மதில் கட்டுவது முதல் கால்நடைகள் வளர்ப்பது வரை இருக்கக் கூடிய சட்டங்களை , அது தொடர்பில் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆவணங்களைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் நீதிமன்றங்களில் குவிகின்ற வழக்குகளையும் பொதுமக்கள் செய்கின்ற செலவுகளையும் குறைத்துக் கொள்ள முடியும்.

# சிறார் உரிமை சாசனங்களுக்கு எதிராக இலங்கை ஜெனீவா மாநாட்டில் ஆதாரங்கள் தாக்கல்!

(கொழும்பு)

**சர்வதேச சிறார் உரிமை சாசனங்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் செயற்படுவது தொடர்பிலான விரிவான ஆதாரங்களை ஜெனீவா மாநாட்டில் பிரான்ஸ் தமிழர் மனித உரிமை மையம் கையளித்துள்ளது. ஜெனீவாவில் கடந்த திங்கட்கிழமை கூடிய ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணைக்குழுவின் 62ஆவது கூட்டத்தொடரின் தலைவரும் பேருநாட்டின் தூதுவருமான மனுவல் றோட்ரிக்கேசிடம் தமிழர் மனித உரிமை மையத்தின் பொதுச்செயலாளர் ச.வி. கிருபாகரன் இதனைக் கையளித்தார்.**

அந்த ஆதாரங்கள் அடங்கிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை ‘சிறுபிள்ளை பாலியல் தொழிலின் சொர்க்க பூமியாக திகழ்வதை’ பல ஊடகங்கள் மூலமாகவும் இணையத்தளங்கள் மூலமாகவும் அறியக்கூடியதாகவுள்ளது. தமிழர் மனித உரிமைகள் மையம் தொடக்க காலத்தில்இருந்து மனித உரிமை தொடர்பாக தவணைமுறையிலான வேறுபட்ட அறிக்கைகள், பத்திரிகைச் செய்திகள், நேரில் கண்டறிந்தவற்றை அறிக்கைகளாக வெளியிட்டுவருகிறது.

இந்த ரீதியில் சிறுபிள்ளைகளின் உரிமைகளில் எவ்வித வேறுபாடுகளுமின்றி சிறுபிள்ளைகளின் அடிப்படை உரிமைகள், வயது குறைந்த சிறுபிள்ளைகளை வேலைகளுக்கு அமர்த்துதல், சிறுபிள்ளைகளை பாலியல் வன்முறையில் ஈடுபடுத்தல், இராணுவத்தில் சேர்த்தல் போன்ற விடயங்களில் மிகவும் அலசி ஆராய்ந்து வேலை செய்கிறோம்.

சர்வதேச சாசனங்கள், சர்வதேச சட்டங்களில் சிறுபிள்ளைகளின் உரிமைகள் சரியான முறையில் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஐக்கியநாடுகள் சபையில் உள்ள 191 அங்கத்துவ நாடுகளில் சிலநாடுகள் தவிர்ந்த மற்றைய நாடுகள் யாவும் இவற்றை ஏற்று கையெழுத்திட்டுள்ளன.

யுத்த சூழ்நிலையைக்கொண்ட நாடுகள் தமது அரசியல் இலாபங்களுக்காக சிறுபிள்ளைகளின் உரிமைகளை அரசியல் மயப்படுத்தியுள்ளனர்.

இந்த நாடுகள் எவ்வகையிலும் சிறுபிள்ளைகளின் உரிமைகளில் அக்கறை கொண்டவர்களல்ல. இந்த நாடுகளில் சிறுபிள்ளைகளின் உரிமைகள் மிக மோசமான நிலையை அடைந்துள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரையில் சிறுபிள்ளைகளின் உரிமைகள் அரசியல் தலைவர்களின் கைகளில் தினமும் ஊஞ்சல் ஆடுவதுடன் சர்வதேச சமுதாயமும் சில சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களும், சில உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கையினால் தமக்கு ஏற்ற வகையில் மிக அழகாக மறைமுகமாக கையாள்கின்றன.

இதற்கு நல்ல உதாரணங்களாக ஐ.நா. சிறுபிள்ளைகளுக்கான உரிமை சாதனத்துடன் தொடர்பு கொண்ட மற்றைய இரு இடப்பத்திரங்கள் அமைகின்றன. சிறுபிள்ளைகள் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபடுத்தப்படுவதும், சிறுபிள்ளைகள் விற்பனை செய்யப்படுவதும் , அவர்களை பாலியல் தொழில் மற்றும் ஆபாசப்படங்களில் ஈடுபடுத்துவதற் குமான து. இவை இரண்டு ஐ.நா. சபையினால் அங்கத்துவ நாடுகளில் கையெழுத்திற்கும் உடன்பாட்டிற்கும் 2000ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி கொண்டுவரப்பட்டது.

இதில் வேடிக்கையானது என்னவெனில், இலங்கை இதில் முதலாவது இடப்பத்திரமான சிறுபிள்ளைகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதற்கானதை உடனடியாக 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் நாள் கையெழுத்திட்டு அப்பொழுதே அதை ஏற்றும் கொண்டது.

ஆனால், இரண்டாவது இடப்பத்திரமான சிறுபிள்ளைகள் விற்பனை செய்யப்படுவதும், அவர்களை பாலியல் தொழில் மற்றும் ஆபாசப்படங்களில் ஈடுபடுத்துவதற்குமானதை இலங்கை 2002ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி கையெழுத்திட்டது.

ஆனால் இன்று வரை இந்த பத்திரம் இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நாம் இதன் உண்மை நிலை ஆராய்வோமானால் துரதிஷ்டவசமாக இலங்கை மிக நீண்ட காலமாக சிறுபிள்ளைகளை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தும் சொர்க்கபூமியாக திகழ்வதை பல ஊடகங்கள் மூலமாகவும் இணையத்தளங்கள் மூலமாகவும் காணக்கூடியதாகவுள்ளது.

ஆனால் இது பற்றி இலங்கை அரசாங்கமோ அல்லது சிறு பிள்ளைகள் உரிமைகள் பற்றி துள்ளிக்குதிக்கும் எந்த அரச சார்பற்ற நிறுவனங்களோ என்றும் ஆட்சேபித்தது கிடையாது. ஏனெனில், இச் சிறுபிள்ளை பாலியல் தொழில் சுற்றுலா பயணிகள் மூலம் இலங்கைக்கு பெரியளவில் வெளிநாட்டு நாணயங்களை பெற்றுக்கொடுக்கின்றன.

இலங்கையில் இவ்வியாபாரத்தை முன்னின்று நடத்தும் பெரும் வியாபரிகள், இலங்கை அரசின் முக்கிய அரசியல் தலைவர்களின் அனுசரணையுடனேயே இவ்வியாபாரத்தை செய்கின்றனர்.

இக்காரணங்களினாலேயே இலங்கை அரசு ஐ.நா. பத்திரத்தை இன்று வரை ஏற்றுக்கொள்ளவில்லை. சில இணையத்தளங்கள், சிறுபிள்ளைகளுக்கான அமைப்புக்களின் புள்ளி விபரங்களை மேற்கோள்காட்டி இலங்கையின் தென்பகுதியில் ஏறக்குறைய ஒரு இலட்சம் சிறுபிள்ளைகள் இவ்வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றன.

அத்துடன் இந்த வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிறுவர்கள் பெரும்பாலும் எச்.ஐ.வி. எனக்கூறப்படும் எயிட்ஸ் நோய்க் கிருமிகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் புள்ளி விபரங்களின்படி இலங் கையில் குறைந்தது ஒரு இலட்சத்து 50 ஆயிரம் சிறுபிள்ளைகள் வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஒரு இலட்சத்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இலங்கையின் இராணுவ சேவையில் இருந்து தப்பி ஓடியதனால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முதியோர் முன்வராத காரணத்தினால் தெற்கில் கிராமப்புறங்களில் இருந்து பாடசாலை செல்லும் சிறுவர்கள் த அரச உதவியுடன் பொய்யான தகவல்களுடன் அரசினால் தயார் செய்யப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களுடன் இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். வயது குறைந்த பாடசாலை மாணவரை இராணுவத்தில் சேர்ப்பது இன்றும் இலங்கையில் அரச ஆதரவுடன் தொடர்கிறது. இக்காரணங்களினால்தான் சிறுபிள்ளைகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்தப்படுவதற்கான பத்திரம் ஐ.நா. சபையினால் நடைமுறைக்கு கொண்டுவர முயற்சித்த வேளையில் இலங்கை முழுமூச்சாக முன்னின்று அரசாங்க இராணுவ சேர்ப்பின் வயது எல்லையை பதினாறாக இருக்கவேண்டும் என்று பிரச்சாரம் செய்து அதில் வெற்றியும் கண்டது.

இலங்கைத்தீவின் வடக்கு-கிழக்கில் ஆயிரக் கணக்கான சிறுபிள்ளைகள் இருபது வருட கால யுத்தத்தினால் பல விதங்களில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இடப்பெயர்வு, கல்வியின்மை , போசாக்குஇன்மை, பெற்றோரை இழந்து, ஊனமுற்று அவையவங்களை இழந்து, உளரீதியாகவும் பாதிக்கப்பட்டு அரசின் எந்த உதவியுமின்றி தமிழ் மக்களின் தயவிலேயே திறமையாக பராமரிக்கப்படும் சிறுவர் இல்லங்களில் வாழ்கின்றனர். இப்படியான உண்மை விபரங்களை இலங்கை அரசு சர்வதேச சமுதாயத்தில் இருந்து மிக நீண்ட காலமாக மூடி மறைத்து வந்துள்ளது.

இப்படியாக மறைக்கப்பட்ட தகவல்களை ஆதாரங்கள் புள்ளி விபரங்களுடன் அறிக்கையாக தயாரித்து இங்கு உங்கள் கவனத்திற்கு கையளிக்கின்றோம். இந்த அறிக்கையில் உள்ள விபரங்களை உங்கள் கவனத்தில் கொண்டு ஆவன செய்வதுடன் , இலங்கை அரசை சிறுபிள்ளைகள் விற்பனை செய்யப்படுவதும், அவர்களை பாலியல் தொழில், ஆபாசப் படங்களில் ஈடுபடுத்துவதற்குமான பத்திரத்தில் கையெழுத் திட அழுத்தம் கொடுக்குமாறும் வற்புறுத்துகிறோம் என்றுள்ளது. (கு)

## உள்ளூராட்சி மன்றங்களின் அங்குரார்ப்பணக் கூட்டம்

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களினதும் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகுமென உள்ளூராட்சி சபை மற்றும் மாகாண சபைகளின் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

இதற்கமைய அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளும் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகும். அன்றைய தினம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தலைவர்கள் , மாநகரசபை தலைவர்கள், உபதலைவர்கள் தெரிவு செய்யப்படுவர் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (கு-7)

## சுன்னாகம் பதி தாழையடி பூரணை புட்கலை சமேத ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் பெருமானின் மஹோற்சவ பாடல்கள்



### மூன்றாம் திருவிழா

இராகம்-மாண்டு தாளம் -ஆதி

பல்லவி

எத்தனை இன்பமையா ஐயப்பா ஐயப்பா
இனிக்கும் உன்நாமத்தை இன்னிசையால்
பாட— எத்தனை

அனுபல்லவி

பித்தனைப் போல இந்தப் பெருவீதி எங்கும் உந்தன்
பெருமையெல்லாம் பேசிப்பாடக்கிடைத்தால் அதில்—
எத்தனை

சரணம்

கண்ணால் காண்பதெல்லாம் உந்தன் கற்பூர ஜோதியே
காதினால் கேட்பதெல்லாம் சாமியே சரணமய்யா
உண்ணும் உணவு உடை உலகத்து இன்பமெல்லாம்
உன்னருளேயென்று எண்ணுவார் வாழ்வினிலே— எத்தனை

ஆக்கம்-ஐயப்ப அடியவர்

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



**உலகம் நிலையற்றது என்பதை அறிந்தாலும் அதை என்னுடையது என்று நினைத்து ஒருவன் வாழ்ந்தால் சம்சாரத்தில் கட்டுப்பட்டு துன்பப்படுகிறான் அவன் விரும்பினாலும் அதிலிருந்து விடுபடும் வழி அவனுக்குத் தெரிவதில்லை.**

சுவாமி விவேகானந்தர்

# ஒட்டுக்குழுக்கள் இயங்குவதை ஆதாரத்துடன் நிரூபிக்க முடியும்

## மட்டு.அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒட்டுக்குழுக்கள் இயங்குவதை ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியும் என மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகன் ஐ.நா. நிறுவனப் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.நிறுவனப் பிரதிநிதிகள் நேற்று முன் தினம் பிற்பகல் 4 மணிக்கு கொக்கட்டிச் சோலை சோலையகத்தில் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகனைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஐ.நா.நிறுவன பாதுகாப்பு ஆலோசகர் கரிஸ்டுரெயிற், ஐ.நா. நிறுவன கள பாதுகாப்பு அதிகாரி கிப்பிலோவ் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட யுனிசெவ் அதிகாரி கிறி ஶ்ரீனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பாகவும் ஐ.நா. சபையின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் செயற்பாடுகள், ஏது நிலை எமது பகுதியில் மேற்படி நிறுவனங்களின் சேவை வழங்கல் பற்றியும் கேட்டறிந்து கொண்டார்கள்.

அத்துடன் இனப்பிரச்சினையின் தோற்றம் எமது போராட்டம் பற்றியும் அவர்களுக்கு எடுத்து விளக்கியுள்ளோம். மற்றும் படையினர் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒட்டுக் குழுக்களின் செயற்பாடுகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன.

ஆட்கடத்தல் சம்பவங்களால் மக்களிடையே பீதியும் பதற்றமும் அதிகரித்துள்ளது என தயாமோகன் ஐ.நா. பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார். (ச-4,5)

## ஜெனீவா செல்லும் புலிகளுக்கு...

அண்மையில் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்தபோது கட்டுநாயக்காவூடான பயணத்திற்கு பாதுகாப்பு உத்தரவாதத்தை இலங்கை அரசாங்கமும் நோர்வேயும் வழங்கினால் மாத்திரமே ஜெனீவாப் பேச்சுக்குப் புலிகள் செல்வார்கள் என பாலசிங்கம் கூறியிருந்தார்.

இந் நிலையில் அரசு தமது முடிபினை தெரிவித்துள்ளது. நாங்கள் நேர்மையான அரசாங்கம் அந்த வகையில் வன்னியில் இருந்து வந்து கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக ஜெனீவா செல்லவிருக்கும் விடுதலைப்புலிகளுக்குப் பூரண பாதுகாப்பினை வழங்குவோம். இதுகுறித்து விடுதலைப்புலிகள் உட்பட யாருமே சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. அவர்கள் எங்களை நம்ப வேண்டும்.

முன்னைய காலங்களில் புலிகள் கட்டுநாயக்காவூடாகப் பல தடவைகள் வெளிநாடுகளுக்குப் பயணங்களை மேற் கொண்டுள்ளனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பதவியேற்று சில வாரங்களிலேயே புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குச் சென்றது.

ஜெனீவாவில் நடந்த முன்னைய சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்காக கட்டுநாயக்கா மூலம் சென்ற புலிகளுக்கு மிகச் சிறந்த பாதுகாப்பினையே அரசாங்கம் வழங்கியது.

அதில் எத்தகைய குறைபாடுகளும் இருக்கவில்லை என்றார். திட்டமிட்டபடி எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை ஜெனீவாவில் அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெறும். இதில் எத்தகைய மாற்றமும் இல்லை.

பேச்சுவார்த்தையினை யாரும் சீர்குலைக்கவும் அனுமதிக்கப் போவதில்லை. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெருந்தொகையான மக்கள் எமக்கு வாக்களித்தது பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கேயாகும்.

எனவே கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்காக செல்லவிருக்கும் விடுதலைப்புலிகளுக்குப் பூரண பாதுகாப்பு வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தினை அரசாங்கம் வழங்கு வதாக அமைச்சர் தெரிவித்தார். (ச-4,5)

## ஒரே குடும்பத்...

தினர் லான்ட் மாஸ்ரரில் ஏற்றிச் சென்ற தாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இச் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட இராணுவத்தினர் கிராமசேவையாளரை அழைத்துச்செல்வில்லை என குற்றஞ்சாட்டப்பட்டது. அத்துடன் அதிகாலை முதல் காலை 10 மணிவரை அப் பகுதி மக்களை இராணுவத்தினர் வெளியில் செல்ல அனுமதிக்கவில்லை.

இச் சம்பவம் தொடர்பாக உறவினர்களால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-101,104,43,52)

## ஐ.தே.க...

ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் நாட்டின் சுபீட்சம் கருதியும் சில நடவடிக்கைகள் கட்சியின் தலைவரினால் எடுக்கப்படவுள்ளதாக கட்சியின் பிரதிப்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (ச-4)


## மனித முகத்...

ஈன்றெடுத்துள்ளது.

இக் குட்டி தாய் ஆட்டினால் ஈன்றெடுக்கப்பட்டு சில மணித்தியாலங்கள் மட்டும் உயிருடன் காணப்பட்டது என்றும் பின்னர் அது இறந்து விட்டது என்றும் கூறப்படுகிறது. (ச-5)

நந்தா,
தேஜா ஶ்ரீ,
மற்றும்
பலர் நடித்த
01.04.2006 முதல்
கோடம்பாக்கம்
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

தங்கர் பச்சான்
நடித்த
சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி
சங்கானை கா.நே. 11.00, 2.45, 6.00, (பு.நே)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.